KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஹு ஏப்ரல் மீ 26வ [No. 17

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 257

2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 259

3. கம்பராமாயணம்—(நட்புப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 261

4. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 2 களம் 1.)
Goldsmith's—"She stoops to Conquer" 263

5. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 5-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 266

6. இரவீந்திரநாதர் கட்டுரைகள்—(மனுஷத்வம்)
W. E. அரியநாயகம். B.A; B.D; B.Ed &
ஆஷாதேவி. M.A. 267

7. மதுரைக்கோவை (இரவிற் குறி பிழைப்பு)
S. வையாபுரிப்பிள்ளை, B.A. B.L. 269

8. ஸ்ரீதியாகராஜ கீர்த்தன மணிமாலை
(கருணை ஜூடவைய்ய)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியர் B.A. 270

9. வர்த்தமானம் 272

## கலாநிலயம்

### கல்சரும் கவிதையும் 6.

உபயோகம் என்பதன் உண்மையான உட்கருத்து யாதென முன்னுள் உரைத்தனம். மண் பொன் பெண்ணாசையால் பேதுற்று மயங்கும் மனம், அவைகளை வைத்தாளவேண்டுமெனும் சுயநல சிந்தனைக்குத் துணைநிற்கின்றவொன்றை உபயோகமுள்ள தென்ன விவகரித்தல் செய்கொண்டு செருப்பவிக்க நினைத்தலே போலாம். உபயோகமுள்ளனவென வுலகம் இந்நாள் இல்வாழ்க்கையிலும் சர்வகலாசாலைகளிலும் சட்ட சபைகளிலும், மகாநாடுகளிலும் வற்புறுத்திக் காட்டுமவை, பெரும்பாலும் மமதையின் தலைவிரிகோலக் காட்சியே யாகும். இந்நிலையிற்றான் கவிதையின் அவசியம் அளவிறந்த தாகின்றது. ஏனெனில், கவிதாசக்தியின் கருமம் இருவகையானது. ஒன்றினுல் நமது அறிவிற்கும் ஆட்சிக்கும் இன்பத்திற்கும் இயன்ற சாதனங்களை அமைத்துத் தருகின்றது. மற்றதால், அச்சாதனங்களும், அவைகளைத் தழுவியுள்ள விஷயங்கள் யாவும், ஒற்றுமையும் ஒழுங்கும் உடையனவாய் நிகழவேண்டும் என்னுமொரு ஆர்வத்தை நாம் அடைகின்றோம். இவ்வொற்றுமையும் ஒழுங்குந்தான் அழகென்றும் அறமென்றும் பெயர்பெறுகின்றன. இவ்வழகிற்கும் அறத்திற்கும் எதிராய சுயநயக்கொள்கையால் கணக்கெண்ணியெண்ணிக் குவிக்கப்படுகின்றபுற வாழ்க்கைக்குரிய சாதனங்கள் அளவுகடந்துவிடவே, பண்படா மானுடமனம் அவைகளை நீதிவழுவாநெறி முறையில் ஓர்ந்துஏற்றுக்கொள்ளும்வகையற்றதாய்த் தவிக்கலாகின்றது. என்னின், ஒன்றினிற்கு ஒன்று இந்நிலப்பொருள்களின்பால் இருக்கின்ற தொடர்பினையும் ஒற்றுமையையும் பிழையாமல் காத்து, அணுவும் அண்டமும் அளவினுலன்றித் தன்மையால் வேறுபடா வாய்மையைவற்புறுத்தும் மனோபாவம் ஒன்றே உலகத்தோ டொருவனை ஒத்து வாழவைக்கவல்லதாகையால் சுயநயமென்ற விஷத்திற்கு மருந்து கவிதையல்லால் பிறிதொன்றில்லை. குணத்தையே கருதுவார் அளவினை ஒரு பொருளென உன்னுர்; எனின் அவ்வேற்றுமையும் அற்றொழிகின்றது. இவ்வுலகத்தை அலைத்தழிக்கும் பேய் மமதை; காத்தளிக்கும் கடவுளோ கவிதை.

கவிதைதான் திப்பியத் தூய்மை வாய்ந்தது. அறிவின் நடு இடமும் அது, எல்லையும் அதுவே. எல்லாச் சாத்திரங்களின் உண்மையையும் உய்த்துணரவல்லது கவிதை. மற்றெத்திறத்து எண்ணங்களுக்கும் ஆணிவே ராவதன்றி அலர்கின்ற மலராவதும் அதுவே. எல்லாம் விளைவது கவிதையினின்று, விளைந்த எல்லாவற்றையும் அலங்கரிப்பதுங் கவிதை. ஒருவனது வாழ்க்கையின் கவிதை நசிக்குமாயின், வித்தும் விளைகனியும் இரண்டுமே இனி இல்லவாம். நிலமும் மலடாக, வாழ்க்கையெனும் விருக்ஷமினிக்கிளைத்தோங்கி வளர்வதற்கு வழியில்லை. மலரிற்கு மணமும் கனிக்குத் தீஞ்சுவையும் உறுப்பிற்கு வடிவும்போல், உலகப் பொருள் அனைத்தையும் உபயோகமாக்குவதும் இக் கவிதையே. குறிப்பும் பேரேடுமாய்க் கூனிக்கிடக்கும் கூகைகள் ஒருபோதும் உயர்தற்கியலா அவ்விண்தலத்தினின்று பேரொளியும் தண்ணளியும் கவிதைதான் கொணரவில்லையெனின், பின் அறங்களும் அன்பும் தேசபக்தியும் நட்பும் இவையெல்லாம் என்னும்!— இவ்வழகிய அவனியின் இயற்கை வளங்களெல்லாம்

என்னும்—இடுகாட்டிற் கிப்புறத்தில் நாம்கண்ட நன்மையென்ன, எதைக்கொண்டு ஆறுவோம்—அதனிற் கப்புறத்தில் நாம் அடைதற்கு விழையவல்ல நற்கதி ஏதென்று எண்ணுவோம்! இவைகளை நினைவில்வைத்துக் கவிதையிற் பெரிய கம்பர்,

> ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
> ஆகும் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
> சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
> போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே

என்று பாடியதின் உட்கருத்தை உன்னியுன்னி அனுபவிக்குங்கால் அதன் அருமை தெரியவரும். பள்ளிக்கூடப் பிள்ளைகளைப்போன்று கட்டுரைகள் எழுதப் பயில்வார் கைக்கெட்டிய ஒரு கவியன்று அது—உலகம் உய்வதற்கு உற்றதோர் உபதேசம்.

மனோபாவத்திற் சிறந்த கம்பருக்கும் இப்பாசுரம் தோன்றியசெவ்வி சாலச்சிறந்ததாயிருத்தல்வேண்டும். இன்பமயமாய உத்தமநிலையடைந்த மாபெரும் மனத்தவர்களுக்கு இன்பத்துள் இன்பமாய் உத்தமத்தில் உத்தமமாய்க் கருதவல்ல வேளைகளில் உதிக்கின்ற உண்மைகளே காவியங்கள் ஆகின்றன. சிற்சில சமயங்களில் எவ்வெந்த அளவு பயிற்சியுற்றிருக்கின்ற மனத்திலும் அவ்வந்த நிலைக்கேற்ற எண்ணங்கள் தோன்றித் தோன்றி மின்னலென்ன மறைவது இயற்கை. இமைக்கும்நேரமும்அமையாது அகல்வதால் அதன் தன்மையை ஓர்ந்துகொள்ள இயல்வதில்லை. எனினும் அத்தோற்றத்தால் விளைந்த பயனோ, அது மறைவதோடு முற்றிலும் அழிந்துவிடுவதும் இல்லை. கவிதா சக்தியுள்ளவர்களுக்கு இவ்வெண்ணங்கள் அடிக்கடி கிளர்கின்றன; மற்றவர்களைக்காட்டிலு மதிகநேரம் நிகழவும் நிகழ்கின்றன. ஆதலால் அவர்கள் அதன் தன்மையையும் பயனையும் உணரவல்லவராகின்றனர். அவ்வுணர்ச்சியைத் தக்கமொழிகளால் உரைக்கவல்ல ஆற்றலும் அவர்களுக்குளது. இவ்வாறு அவர் உரைசெய்தமொழிகளில்நாம்நான்குபழகிவருவோமாயின் நம்மிடத்து உதிக்கின்ற எண்ணங்களின் தன்மையையும் பயனையும் ஒரு நொடிக்குள் தேர்ந்துகொள்ளக் கூடியவராவோம். சொல்லத்தெரியாத காரணத்தால் பல சிந்தனைகள் பயனற்றுப் போகின்றன. கவிகளின் மொழிகளைக் கற்றிருந்தக்கால் சொற்கள் வாய்க்காத குறைபற்றி நமது எண்ணங்களோ சோரவேண்டா. சொல்லவேண்டும் என்னும் முயற்சியும், அச்சொற்களால் அவை நம்மிடத்து நிலைநிற்கவேண்டுமெனும் ஆசையும் உளவாயின், சொல்வன்மை இன்மையால் அவ்வெண்ணங்கள் தங்காமற்போனவிடத்தும், "நன்றாக நம் நாத் தேர்வதமுன், உணர்ந்தது சிறிதேனும் அதனை உரைப்பதற்கு முன்னமே, உதித்த எண்ணங்கள் மறைந்தனவே" என்று நாம் வருந்தலாவோமெனினும் அவ் வருத்தத்திலேயே இன்பம் பெரிது உளது. அவ்வாறுவருந்தவேனும் கற்போமாயின்கவிதைக்கு நாம் அண்மைய ராகின்றோம்.

இத்தகைய நினைவுகள்தாம் தெய்வத் திருவுள்ளம் நம்மூடு உருவிச்செல்லும் செவ்வியால் நேர்பவை. நுண்ணுணர்வும் நல்ல மனோபாவமும் உடையவரிச் செவ்வியைப் பெறுதற்குப் பெரிதும் பாத்திர ராகின்றனர். இந்நிலை எய்திய மனது இழிவுடைய நசையையெல்லாம் இகலி நிற்கின்றது. அறம், அன்பு, தேசபக்தி, நட்பு முதலியவைகளுக்குரிய ஊக்கங்களின் தொடர்பை அத்தகையமனநிலையின்கண் நன்கு காணலாம். அப்பொழுதே 'நான்' என்னும் நினைவு, அண்டத்து ளோரணுவாய் அளவழிந் தொழிகின்றது. கவிஞர்கள் இவ்வித அநுபவத்திற்கு ஆளாகின்றபோது, முன்னே நாம் உரைத்தவண்ணம், தனித்தனியாகத் தோன்றிய எண்ணங்களையெல்லாம் தொகுத்து அத்தொகுதியால் எய்துகின்ற முடிவிற்குத் தம்முடைய தெய்விகத் தன்மையை இனிது அளித்து, மண்ணுலக மாயைநின்றும் நீக்கித் தாம்கற்பிக்கும்ஓர் நிரந்தரமாய ஆன்மவுலகத்தினது ஆட்சிகொண்டு நம்மனோரைப் பரிவினோடும் அத் திருநாட்டிற் குடியேற்றுகின்றனர். இன்னபடி கவிதையானது, இவ்வுலகத்தில் சிறப்பும் அழகும்உற்றுத் திகழ்வனயாவற்றையும், அவ்வுலகத்திற்குச் சிரஞ்சீவியாக்கித் தருகின்றது. வந்துவந்து மறைகின்ற திவ்விய எண்ணங்களைப் பிடித்துநிறுத்தித் தம்முடைய கலைகளால் அவைகளைஅலங்கரித்து மக்களுக்கிடையே நடமாடவிடுவது கவிதை யாகையால்கடவுளின்கருத்தைத் தெரியும்படிசெய்யுஞ்சக்தி அதனிற்கு உளதென்று உணரல்வேண்டும். கடவுளின் கருத்து இவ்வித உருவெடுத்து நடமாடுங்காலையில் பயன்தெரிவார் சிலர், அவைகளைத் தம் மினமாய்த் தேர்ந்துகொள்ளலுங்கூடும். ஆதலின், மாந்தர்பால்அவ்வப்போது உதிக்கின்ற தெய்விக உணர்வு நசிக்காமல் காத்துவைப்பது கவிதை.

ஏனெனில் கவிதை, எல்லாவற்றையும் காமுறும் வனப்புடையன வாக்கிவிடுகின்றது. அழகற்றதைஅழகாக்கி, அழகுள்ளதற்குப் பின்னு மழகுசெய்து தருவதுமல்லாமல், கவிதையின் அங்கமாய மனோபாவம், பயம் துணிவு, இன்பம் துன்பம், நித்தியம் அநித்தியம் என்னு மிவையனைய முரணுடையவைகளையும் ஒன்றுபட மருவவைக்கின்றது . கவிதை புரியுமோர் இரகசியமானஇரஸவாதத்தால் மாற்றற்றபொன்னாக மாறாததொன்று இவ்வுலகி லில்லை. மெய்ந்நெறி நன்மையன் ஆகிய கடவுள், இவ்வகையில், யாவும் உயர்வடைந்து வேற்றுமையற்றதே ஆகவேண்டு மென்று விதித்திருக்கின்றனர். அவ்விதியை நமக்குப் போதித்துத் தருவதுமல்லாமல் அதன்படி நம்முடைய வாழ்க்கை நடப்பதற்குச் சடங்குகாட்டும் அந்தணர்களும் கவிகளே. அவர் போதிக்கின்ற நெறியினை நினைத்து, காட்டுமச் சடங்கிற் கிணங்கி, நம்கருமத்தைச்செய்து வருவோமாயின் அழகும்அறமும்அன்பும்அழைத்தவிடந்தோறும் வந்துநின்று உதவாவோ. இவைகளின் உதவிதா னுண்டெனில் சட்டதிட்டங்களும் சமூகத் திருத்தமும் வேண்டுமோ. மற்று, அவையின்றி இவைதான் பயன்பட்டவோ; ஆண்டுபலப்பல முயன்றாலும் பயன் படுமோ. ஓட்டுச் சீட்டிற்குக் கையைநீட்டாமல் உலகத்திற்குச் சட்டம் விதிக்கின்ற அங்கத்தினர் இக்கவிஞர்களாவார்.

இப்பொழுது, நாம்முன்னர் 8,9,10,11-வது இதழ்கள் நான்கிலும் "கல்சரின் அவசியம்" என்ற தலைப்பின் கீழ் வரைந்த நான்கு தலையங்கங்களில் குறித்த பொருள்களை மனத்திற்கொண்டால், கல்சருக்கும்கவிதைக்குமுள்ள தொடர்புநன்குபுலப்படும். தன்னுடைய இஷ்டத்தையேனும் பிறருடைய இஷ்டத்தையேனும்நடத்திவைக்க முற்படுவதின்றிக் கடவுளின் இஷ்டத்தைத் தேர்ந்துகொண்டு, அதுவேஉலகத்தில் முட்டில்லாமல் நடைபெற்றிடுமாறு புரிவது ஒன்றே கல்சரின் கரும

மாகும் என்றும், அக்கருமத்தி னளவிலேயே இருள் நீங்கி இன்பமே எங்கெங்கும் இயங்குவதாம் எனவும், அவ்வரிசைத் தலையங்கங்களில் ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டினோம். அத்தகையதோர் கருமத்தைச் செய்வதற்கொத்த தன்மையைபடைவதும் மனத்திற்குரிய பயிற்சியினால் ஆவதேயன்றி, வாயால் விதிப்பதோடு அமையாது என்பதையும் வற்புறுத்தினோம். கலை,கவிதை மனோபாவம்பகுத்தறிவுஎன்பவைகளின் இலக்கணங்களையும், அவை ஒன்றோடொன்றும் நம் வாழ்க்கையிற் கலந்தும் பயிலுமாறும், "கல்சரும் கவிதையும்" என்னு மித்தலையங்ககங்ளில் காட்டப்பெற்றன. இவைகளினின்று அக் கல்சர்நிலை அடைவதற்குரிய சாதனமாய கவிதையின் கருவூலமாங் காவியங்கள் அமைகின்ற பெருமையை எளிதில் உணரலாமே.

# தமிழ்ப்பாடம் 117.

## வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[245-வது பக்கத் தொடர்ச்சி]

### கிருஷ்ணன் தூதுச் சருக்கம்

முன்ன கங்குடை கவித்தகா ளமுகின்
  முன்னிருந்த தன்பின் முகங்கொடா
தென்ன கந்தனை யொழித்து நென்னலிடை
  யிந்தமா நகரி லெய்தியும்
பொன்ன கங்கொள் புயவிதுர னில்லிடை
  புகுந்த தென்கொலிது புகலெனப்
பன்ன கந்தனை யுயர்த்த கோவுமுரை
  பகரமா லுமெதிர் பகர்வான். 49.

தன்னுடைய மனைக்கு வராமல் விதுரன் மனைக்கு ஏன்சென்றாய் என்று கண்ணனைத் துரியோதனன் வினவுகின்றான்.

பதவுரை.

முன் - முன்னாளில், நகம் - (கோவர்த்தன) மலையை, குடை - (இந்திரன் பெய்வித்த சோனைமாரியை விலக்கும்பொருட்டு) குடையாக, கவித்த - கவித்தவனாகிய, காளமுகில் - கருமேகம் போன்ற கண்ணன், முன் - எதிரே, இருந்ததன் பின் - அமர்ந்த பிறகு, முகம் கொடாது - முகம் கொடுக்காதவனாய்,

நென்னல் இடை - நேற்றையதினம், இந்த - இந்த, மா - பெரிய, நகரில்-நகரத்திலே, எய்தியும் - வந்து சேர்ந்தும், என் அகம்தனை - என்னுடைய மனையை, ஒழித்து - தள்ளிவிட்டு, பொன் நகம்கொள் - பொன் மலை போன்ற, புயம் - புஜங்களை உடைய, விதுரன்- விதுரனது, இல் இடை - வீட்டிற்குள், புகுந்தது - நீ புகுந்தது, என்கொல் - என்ன காரணம்? இது - இதனை, புகல் - சொல்லக்கடவாய், என - என்று,

பல் நகம்தனை - பற்களையுடைய பாம்பை, உயர்த்த- கொடியாகத் தூக்கியிருக்கின்ற, கோவும் - அரசனாகிய துரியோதனனும், உரைபகர - சொல்ல, மாலும்- திருமாலாகிய கண்ணனும், எதிர் பகர்வான்-பின்வருமாறு பதில் கூறுவான்.

விரிவுரை:—'முன் நகம் குடைகவித்த காளமுகில் என்று கண்ணனை இங்குக் குறிப்பதில் ஓர் உட்கருத்து அடங்கியிருக்கின்றது. மலையும், அதன்மேல் மேகங்கள் குடைபோல் கவிந்திருப்பதும் இயற்கை. இந்த மேகமோ, தான் கீழாகவும் மலை தனக்கு மேலாகவும் மாறிஇருக்கும்படிசெய்தது. இவ்வண்ணம் யாவற்றையும் மேல் கீழாகப் புரட்டவல்ல மா மாயனாய இவன் இங்குத்துரியோதனன் அவையில் யாது செய்வானோ என்னும் பொருள்பட அம்மொழிகள் நிற்பதனால் அவை கருத்துடை யடைஅணி. அவ்வாறே 'பொன் நகம்கொள் புய விதுரன்' எனப் பேசியபோதும் மலை போன்ற திரண்ட தோளை உடையவனாய் இருத்தல் பற்றிப் போரிலே அவனைப் பாண்டவர்களின் பக்கம் உதவியாக்கிக் கொள்ளும்பொருட்டு அவனோடு நீ உறவுகொள்ளச் சென்றனையோ என்னும் எண்ணம் துரியோதனனது மனத்தில் இருந்திருக்கலாம்.

---

என்னி னின்னி லொருபேத மில்லையிது
  வென்னி னின்னிலது வென்னினு
மின்னின் முன்னிலகு விறனெ டும்படை
  விதுரன்வந் தெதிர்வி ளம்பினா
னுன்னி லின்னமுள தொன்று பஞ்சவ
  ருரைக்க வந்தவொரு தூதன்யா
னின்னி லின்னடிசி லுண்டு நின்னுடன்
  வெறுக்க வெண்ணுவது நீதியோ 50

விதுரன்மனைக்குச் சென்றதற்குக் கண்ணன் காரணம் கூறுகின்றான்.

பதவுரை

என் இல் - எனது வீடு என்றும், நின் இல் - உனது வீடு என்றும், ஒரு பேதம் - வித்தியாசம் ஒன்றும், இல்லை - பாராட்டவில்லை.

இது என் இல் - இது என்னுடைய வீடு, நின் இல் அது - அது உன்னுடைய வீடு, எனினும் - என்று நீ பிரித்தே பேசுவாய் ஆனாலும், மின்னில் - மின்னலைப் போல, முன் - முன்னே, இலகு - பிரகாசிக்கின்ற, விறல்-பராக்கிரமம் பொருந்திய, நெடும்படை-பெரிய ஆயுதங்களை உடைய, விதுரன்-விதுரனானவன், வந்து- வந்து, எதிர் விளம்பினான் - எதிர்கொண்டு அழைத்தான்.

உன்னில் - யோசிக்குங்கால், இன்னம் ஒன்று உளது - இன்னொரு காரணமும்இருக்கின்றது; பஞ்சவர்-பஞ்ச பாண்டவர்கள், உரைக்க - சொல்லவே, வந்த-அவர்கள் சொல்லியபடிவந்த, ஒருதூதன்யான்- ஒரு தூதன் நான் ஆவேன்.

(ஆகவே) நின்இல்- உனதுவீட்டில், இன் அடிசில்- இனிய உணவை, உண்டு - சாப்பிட்டுவிட்டுப் பின், நின் உடன் - உன்னோடு, வெறுக்க - வெறுத்துக் கொள்ள, எண்ணுவது - நினைப்பது, நீதியோ- நீதியாமோ, (என்று கண்ணன் மொழிந்தான்)

விரிவுரை:—கண்ணன், தான் துரியோதனன் வீட்டிற்குச் செல்லாது விதுரன்மனையைத் தனது இருப்பிடமாகக் கொண்டதற்கு மூன்று காரணங்கள் கூறுகின்றான்.

'துரியோதனா நான், உன்வீடு விதுரன் வீடு என்று பிரித்துப் பாராட்டவில்லை. நீ பிரித்தேபாராட்டுவாயாயின், நீ வந்து உன்மனை ஏகுமாறு என்னை அழைத்

தாயோ? இல்லை. மற்று, விதுரன் வந்து எதிர்கொள்ள, நான் அவன்மனை சென்றேன். இவ்விரண்டும் தக்க காரணங்களாயினும், அவன் வந்து எதிர்கொண்டான் என்று சந்தோஷமும், நீ எதிர்கொள்ளவில்லை என்று கோபமும் நான் கொள்பவனல்லன். நானோ பாண்டவர் தூதனாக வந்திருப்பவன். நான்வந்த காரியம்முடியாமற்போகுமாயின் பாண்டவர்தம் தூதன் என்ற முறையில் உன்மீது வெறுப்புக்கொள்ள நேரலாம். எனவே, உன்மனையில் உண்டு பின் உன்னை வெறுத்துப் பேசுதல் நீதியாகாதாகையால், நான் விதுரன் மனை தங்கினேன்" என்று கண்ணபிரான் இச்செய்யுளால் துரியோதனனுக்கு உணர்த்துகின்றான்.

குறிப்பு:—விதுரன்மனை சென்றதற்குக் காரணம் இதுவென்று கூறிய கண்ணனைப்பார்த்துத் துரியோதனன், 'நீ இங்கு வந்த வினை யாது' என்றுகேட்கவும், முன் இசைவின்படி, பாண்டவர்க்குரிய பாகத்தைக் கேட்கத் தான் வந்துளன் என்றும், அதை அவர்க்கு வழங்குவதே புகழுடைய கருமமென்றும், கௌரவர் மறுப்பாரேல் அது, ஆண்மையும் அறமும் புகழுமுடையதாகாதென்றும் கண்ணன்எதிர்விளம்பும் செய்யுள்கள் ஐந்து இதற்குப்பின் விடலாயின.

---

நீவெ றுக்கிலெ னிருந்த மன்னவர்
  திகைக்கி லென்பல நினைக்கிலென்
போய்ந கைக்கிலெ னுரைத்த வுண்மைமொழி
  பொய்த்ததென் றமரர் புகலிலென்
வேய்ம லர்த்தொடை யலைவ ரென்னுடன்
  மிகைத்து வெஞ்சமர் விளைக்கிலெ
னியி ருக்குமிட மெனினுமிப் புவியில்
  யானவர்க் கரசினிக் கொடேன் 51.

அரசொன்றும் கொடுக்கமுடியாதென்று துரியோதனன் மறுக்கின்றான்.

பதவுரை

நீ வெறுக்கில் என்-நீவெறுத்தால் என்ன; இருந்த மன்னவர் - இச் சபையில் இருக்கும் மன்னவர்கள், திகைக்கில் என்-திகைப்புற்றால் என்ன; பல நினைக்கில் என் - (என்னைப்பற்றிப்) பலவாறு நினைத்தால்என்ன; போய்-வெளியே போய், நகைக்கில் என்-நகைத்தால் என்ன; (அன்றியும்) உரைத்த-நான் முன்கூறிய, உண்மைமொழி-மொழியின் உண்மை, பொய்த்தது-பொய்யாய்ப் போயிற்று என்று, அமரர்-தேவர்கள், புகலில் என் - சொன்னால் என்ன; வேய் - தொடுத்த, மலர்த்தொடையல் - மலர்மாலை தரித்துள்ள, ஐவர் - பஞ்ச பாண்டவர்கள், என்னுடன் - என்னோடு, மிகைத்து - பொங்கி எழுந்து, வெம் - கொடிய, சமர் - போரை, விளைக்கில் என் - விளைத்தால் என்ன. (எவர் என்னவாகிலும் சொல்லிக்கொள்ளட்டும், செய்து கொள்ளட்டும்) இனி-இனிமேல், யான்-நான், இப்புவியில்-இப்பூமியில், ஈ-ஈயானது, இருக்கும் இடம் எனினும்-இருப்பதற்குள்ள அவ்வளவு சிறியஇடம் என்றாலும், அவர்க்கு - பாண்டவர்களுக்கு, அரசு - இராஜ்யம், கொடேன் - கொடுக்கமாட்டேன் (என்று துரியோதனன் மொழிந்தான்.

விரிவுரை:—மானம் காவாமை, பழி அஞ்சாமை, தீவினையச்சம் கொள்ளாமை முதலிய கயமைக் குணங்களைத் துரியோதனனிடத்தில் இங்குக் கவி காட்டுகின்றார்.

---

## இலக்கணம்

D நான்காம் வேற்றுமை.

நான்காம்வேற்றுமை உருபு பொருள் முதலியனவற்றை முன் (5-வது வால்யூம் 923-வது பக்கத்தில் விளக்கியிருக்கின்றோம்.) இவ்வேற்றுமைக்குறிய குவென்னும் உருபேனும் அல்லது, பொருட்டு ஆக என்னும் சொல்லுருபேனும் பெரும்பாலும் விரிந்தே வருவது தமிழ் வழக்கு. ஆயினும், 'சீதை கேள்வன்' என்பதுபோல் முறைப்பொருளினும், 'கூலிவேலை' என்பதுபோல்பொருட்டுப்பொருளினும், 'கடிப்பகை' என்பதுபோல், பகைப்பொருளினும் 'விளக்கெண்ணெய்' என்பதுபோல் நேர்ச்சிப்பொருளினும், நான்காம் வேற்றுமை உருபு சிற்சிலபோது தொக்கு நிற்றலும் உண்டு. நான்காம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகைகள் நேர்வது மிக அருமை.

I நிலைமொழி, கு, பொருட்டு, ஆக, என்னும் நான்காம் வேற்றுமை உருபுபெற்ற சொல்லாயின் வருமொழி முதல் வல்லினமெய் மிகுந்தே புணரும்.

ஏழைக்கு + பொருள் கொடுத்தான் = ஏழைக்குப் பொருள் கொடுத்தான்.

நகைக்கு + தங்கம் வேண்டும் = நகைக்குத் தங்கம் வேண்டும்.

பொன்னின்பொருட்டு + பொய்சொன்னான் = பொன்னின்பொருட்டுப் பொய் சொன்னான்.

பெருமைக்காக + சிரித்தான் = பெருமைக்காகச் சிரித்தான்.

II (1) நான்காம் வேற்றுமைத் தொகையில் (நிலைமொழி உயர்திணையாயில்லாமலிருந்தால்) வருமொழி முதல் வல்லினமெய் மிகுந்து புணரும்.

கடி + பகை = கடிப்பகை (கடிக்குப்பகை = வெண்சிறுகடுகு)

பாம்பு + பகை கருடன் = பாம்புப் பகை கருடன். (பாம்புக்குப் பகை)

(2) நிலைமொழி உயர்திணையாயிருக்குமாயின் நான்காம்வேற்றுமைத் தொகையில், வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

சீதை + கேள்வன் = சீதை கேள்வன்

மந்திரி + புதல்வன் = மந்திரி புதல்வன்

III (1) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகள் என்று கருதும்படி நிற்கின்ற தொடர்களிலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்து புணரும்.

கூலி + குற்றேவல் = கூலிக்குற்றேல். (கூலிக்குச் செய்யும் குற்றேவல்)

மயிர் + சாந்து = மயிர்ச்சாந்து (மயிரிற்குப் பூசும் சாந்து)

(2) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும் நிலைமொழி உயர்திணையாயிருக்குமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

பெரியோர் + குணம் = பெரியோர்குணம் பெரியோர்க்குத் தகுதியான குணம்.)

காளி + பூசை = காளி பூசை (காளிக்குச் செய்யும் பூசை)

(3) நான்காம்வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்கதொகையிலும் நிலைமொழி வடசொல்லாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது

சுவான + பலி = சுவானபலி (சுவானத்திற்குப்போடும்பலி)

காக + பலி = காகபலி(காகத்திற்குப் போடும் பலி)

தேவ + பூசை = தேவபூசை(நிலைமொழிவடமொழியோடு உயர்திணையாகவும் இருக்கின்றது)

குறிப்பு:—நாய்ப்பலி, என்னுமிடத்து நிலைமொழி தமிழ்ச்சொல்லாதலால் வல்லெழுத்து மிகுந்து புணர்ந்தது. இதே பொருளுடைய 'சுவானபலி' என்னுந் தொடரில், சுவானம் என்பது வடமொழி யாதலால் வலி மிகவில்லை.

ஆகையால்,நான்காம் வேற்றுமை விரியினும், நிலைமொழி உயர்திணையாகவேனும் வடமொழியாக வேனும் இல்லாத நான்காம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்களினும், வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தே புணரும் எனறு கொள்ளலாம்.

குறிப்பு:—நான்காம் வேற்றுமைத் தொகையில் வருமொழி முதல் வல்லினமெய் மிகுமென்றோம். எனினும், மனைசென்றான், காடுசென்றான், ஊர் சென்றான், என்னும் தொடர்களில் மிகாமைக்குக் காரணம் என்னவென்று சந்தேகங் கொள்ளலாம். மனைக்குச் சென்றான், காட்டிற்குச் சென்றான், ஊர்க்குச் சென்றான், என இவை கு உருபுபெற்று விரிகின்றனவாயினும், அவ்வுருபு நான்காம்வேற்றுமைக்குரிய பொருள் ஒன்றையுங் குறிக்காமல், ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருளையே எடுத்துக் காட்டுகின்றது. மனையின்கண் சென்றான், வீட்டின்கண் சென்றான், ஊரின்கண் சென்றான் என அவை ஏழாம் வேற்றுமைத் தொகைகள்; எனவே வலி மிகவில்லை.

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தாகாண்டம்—3. நட்புப் படலம்

[251-வது பக்கத் தொடர்ச்சி]

பதமிலாப் பரிகசம் பகர லாகுமோ.

முன்னாள் ஈட்டியுள்ள தவத்தினோடு பின்னர்முயற்சியும், கேட்டுணர்ந்த கல்வியோடு ஞானமும், இயைந்தொத்துக் கூடிய இராமபிரானுக்கும் சுக்கிரீவனுக்குமிடையே விளைந்தவொரு நட்பின்பயனைப் இராகவன் உரைத்த உறுதிமொழிகளைக் கேட்டு,

ஆர்த்தது குரக்குச் சேனை
யஞ்சனை சிறுவன் மேனி
போர்த்தன பொடித்த ரோமப்
புளகங்கள் பூவின் மாரி
தூர்த்தனர் விண்ணோர் மேகஞ்
சொரிந்தன வனகன் சொன்ன
வார்த்தையெக் குலத்து ளோர்க்கு
மறையினு மெய்யென் றன்னோ.

[குற்றமற்றவனாகிய இராமன் சொன்ன வார்த்தைகள் எக்குலத்தில் உள்ளவர்களுக்கும் வேதவாக்கிலும் உண்மையாம் என்று எண்ணி,வானரச்சேனை ஆரவாரஞ் செய்தது; அஞ்சனையின் பிள்ளையாகிய அநுமான் மேனியை, அரும்பிய மயிர்ச்சிலிர்ப்புக்கள் மூடின. தேவர் மலர்மழையால் (பூமியை) நிறைத்தார். மேகங்கள் மழை பெய்தன.]

அதன்பின் அனுமன் அழைக்க அனைவரு மெழுந்து வனப்புடையவோர் புதுமலர்ச்சோலையெய்தி,அங்கமர்ந்து அளவளாவி மஞ்சனத்தொழில் புரிந்து பின் இராகவன் இனிதிருந்து நல்விருந்து மாயினான்.

விருந்து மாகியம் மெய்ம்மை யன்பினோ
டிருந்து நோக்கிநின் றிறைவன் சிந்தியாப்
பொருந்து நன்மனைக் குரிய பூவையைப்
பிரிந்துளாய் கொலோ நீயும் பின்னென்றான்.

[இவ்வாறு இராமபிரான் விருந்தினனாகிப் புசித்தபின்பு, தனக்குரிய உண்மையான அன்புடனே அமர்ந்துநோக்கி ஆலோசித்து, பொருந்திய மனைவாழ்க்கைக்கு உரிய மனைவியைநீயும் (என்னைப்போல்)பிரிந்திருக்கின்றாயோஎன்று வினவினான்.]

"சுக்கிரீவ,உன் வரலாற்றைச் சொல், நான் அதனை அறிய அவாவுகின்றேன்" என்று இராமன் கேட்கச் சுக்கிரீவன் அனைத்தையும் இயம்பியபடி வான்மீகத்தில் நிகழ்வது கதைமுறைக்கு அமையும். விருந்து புரியுங்கால் மனைக்குரியாள் அயலில்லாமையின் இராமன் அதன் காரணம் வினவநேர்ந்ததிலிருந்து இவ்வாறு கூறலாயிற்று எனக்கம்பர் நாடக இயற்கைநயம் பெறமாற்றுவார். அன்றியும்,தன்னால் விளைந்த தீமையைத் தானே கைகேயியைப்போற் சிற்சிலர் தெரியச் சொல்லலாமாயினும் தான் உற்றதோர் பரிபவத்தைத் தானே சொல்லக்கூசுதல் இயற்கையேயென உன்னிக் கம்பர் அக்காரியத்தை அனுமனுக்கிங்கு அளித்துவிடுகின்றார். இதன்படி, இராமன் அன்னவாறு கேட்டவளவில், மாருதி குன்றுபோல் எழுந்து நின்று இருகை கூப்பினனாய், "சின்ற நீதியாய், நெடிது கேட்டி, ஒன்றுயான் உனக்கு உரைப்பதுண்டு" என்று துவக்கிப் பின்வருமாறு நிகழ்த்தலானான்:—

"நான்கு வேதங்களாகிய கடலின் வேலியைப் போன்ற பழைய கைலாசமலையின்மேலுள்ள சிவபிரானது கருணையில் முதிர்ந்த வாலிஎன்ற பெயருடைய வரம்பற்ற ஆற்றலுடையவன் உளன். அவன், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே நின்று சுழன்ற மந்திரமலையின் உருவமும் அதற்குக் கடைகயிறான வாசுகியின் வயிறும் தேயும்படி, அலைகின்ற பாற்கடலை முற்காலத்தில் கடைந்த தோள்களை யுடையவன். நிலமும் நீரும் நெருப்பும் காற்றும் என்ற அழிவற்ற நான்கு பூதங்களும் தனித்தனி கொண்டிருக்கும் ஆற்றலைத் தன்னிடம் ஒருங்கே அமையப் பெற்றவன். சமுத்திரங்களுக்கப்பால் சூழ்ந்திருக்கின்ற சக்ரவாள கிரியிலிருந்து இம்மலைக்குத் தாவவல்ல திறமையுடையவன்.

கிட்டு வார்பொரக் கிடைக்கி னன்னவர்
பட்ட நல்வலம் பாக மெய்துவான்
எட்டு மாதிரத் திறுதி நாளுமுற்
றட்ட மூர்த்திதாள் பணியு மாற்றலான்.

[நெருங்கியாவரேனும் போர்செய்ய வருவார்களாயின், அவர்களுக்கு வாய்த்திருந்த நல்ல பலத்தில் ஒரு பாதி பாகத்தைத் தான் அடைபவன். நாள்தோறும் எட்டுத்திக்குக்களின் எல்லைவரையிலுஞ் சென்று சிவபிரானது தாள்களை வணங்கும் வழக்கமுடையவன்]

கால்செ லாதவன் முன்னர்க் கந்தவேள்
வேல்செ லாதவன் மார்பின் வென்றியான்
வால்செ லாதவா யலதி ராவணன்
கோல்செ லாதவன் குடைசெ லாதரோ

[அவ்வாலியின் வேகத்திற்குமுன் காற்றும் செல்லாது, அவன் மார்பில் முருகக்கடவுளின் வேலும் செல்லாது. வெற்றிவாய்ந்த அவனுடைய வால் செல்லாத இடத்தில் தான் இராவணனது அதிகாரமும்வெற்றியும் செல்லக்கூடும்]

இவ்வாலி நடப்பானாயின் அவ்வதிர்ச்சியால் மேருவே முதலிய பெரிய மலைகளெல்லாந் தத்தம் இடம்விட்டு வேரோடும் பெயர்ந்து தொடரும். அவன் பெரியதோள்களால் நீண்டமேகங்களும்ஆகாயமும்சந்திரசூரியர்களும் மலைகளும் மறைந்துபோய்விடும். முற்காலத்தில் பூமியைத் தோண்டிக் கொணர்ந்த ஆதிவராகமே யானாலும், கடலைக்கடைவதற்கு உதவிய ஆமையேயானாலும், எதிரியான ஹிரண்யனது மார்பைப் பிளந்த நரசிங்கமே யானாலும், அவனது வெற்றிமாலையணிந்த தோள்களை எதிர்க்க வல்லவோ. ஆதிசேஷனும், அடர்ந்து நீண்ட பெரிய தலையில் படங்களைப் பரப்பிக்கொண்டு அதன்மேல் பாரம் பொருந்தும்படி கீழிருந்து இப்பூமியைத் தாங்குகின்றான்; மற்று, கிட்கிந்தையிலிருக்கும் வாலியோ இப்பூமியைத் தாங்கிக் கொண்டு எளிதில் நடந்து திரியவல்லவன். கடலானது தன் எல்லைக்குள்ளே தடுமாறிக்கிடப்பதும், காற்றானது உயிர்த்துச் சலித்துச் சஞ்சரிப்பதும், வலிமையுடைய சூரியர்களினுடைய தேர் ஆகாயமார்க்கமாகச் செல்வதும், அவன் கோபத்திற் கஞ்சியே யன்றி வேறு காரணத்தா லன்று. வாலியின் கோபத்திற்கு அஞ்சி, அவன் விரும்பி வசிக்கின்ற இடத்திற்கெதிரே மேகமும் இடிக்காது, சிம்மம் கர்ச்சிக்காது, காற்று அடிக்காது. இவ்வாலி தன் வாலினால் இராவணனது இருபது தோள்களையுங் கட்டி எடுத்துச் சென்றபோது, அவ்விராவணன் உடம்பிலிருந்து சொரிந்த இரத்தம் சிந்தாத உலகம் எங்குளது? இந்திரனது ஒப்பற்ற புதல்வனாகிய அவ் வாலியானவன், சந்திரனைப் போன்ற வெண்மையான மேனியை உடையவன்; எமனும் அஞ்சிநடுங்குகின்ற ஆக்கினையுடையவன்; இந்தச் சுக்கிரீவனுக்குத் தமையனாய்ப் பிறந்தவன். அவ்வாலி எங்களுக்கு அரசனாகவும் இச்சுக்கிரீவன் இளவரசனாகவும் இருந்தகாலத்தில், மின்னலைப்போன்ற கோரப்பற்களையுடைய கொடிய அசுரனாகிய மாயாவி என்பவன் எங்கள் குலப்பகையாக வந்து வாலியை எதிர்த்தான். எதிர்த்தவன் வாலியின் வலிக்கெதிரில் நிற்க அஞ்சி மனம்நடுங்க ஓடிப்போய், இந்தப் பூமண்டலத்தில் உயிர்பிழைப்பது அரிதென்றெண்ணி அடைவதற்கரிய பிலத்தினுள் புகுவதாயினான். இவ்வாறு மாயாவி புகுந்ததும், கோபம் மிகுந்த வாலி சுக்கிரீவனை நோக்கி, 'நானும் அப்பிலத்தினுள் புகுந்து அவ்வசுரனை விரைவிலே பிடித்துக் கொணர்வேன், சிறிது நேரம் நீ இப்பிலத்தின்வாயிலைக் காத்திரு' என்றுகூறி உட்சென்றான். சென்று இருபத்தெட்டு மாதகாலம் மாயாவியைத் தேடினவனாய் வெற்றியில் மோகங்கொண்டு தாமதிக்க, தம்பியாகிய இச்சுக்கிரீவன் துன்பமடைந்து கலங்கினான். கலங்கிக் கலுழ்ந்த இவனை நோக்கிநாங்கள் தொழுது, 'இனி அரசுசெய்வது உன் கருமமாகையால் அதனைச் செய்' என்று அன்புடன் வேண்ட, அவன் அது குற்றமாம் என்று சொல்லி, அவ்வழியே சென்று "பெரிய பிலத்தினுள் என் தமையனைத்தேடுவேன்; அவன்மாண்டிருந்தானேயாகில் அவனைக் கொன்ற பகைவனைக் கொல்வேன்; அப்படி அவனைக் கொல்ல இயலவில்லையானால் அவனுடன்போர் செய்து நானும்இறப்பேன்" எனத்துணிந்து நுழையப் போயினான். அப்பொழுது மந்திரிமார் முதலாயினோர் இவனைத் தடுத்து, தணிவு செய்து, துயரத்தை ஆற்றி, வாலிக்குப்பின் இவனுக்கு உரியதாயிருக்கின்ற அரசாட்சியைக் கொடுத்தது உண்டு. அக் குரங்குகளின் ஆணையை மறுப்பதற்கு அஞ்சி இவனும் ஒருவாறு உடன்பட்டு அதனைஏற்றுக்கொண்டான். அப்போது நாங்கள், வாலியைக் கொன்ற மாயாவி அப்பிலத்திலிருந்து இந்தவழியாய் வந்து எங்களுக்கு இடுக்கண் செய்வான் என்றஞ்சி, மேருமலையைத்தவிர மற்றமலைகளையெல்லாம் கொணர்ந்து அடுக்கிக் குவித்து அப்பிலத்துவாரத்தை அடைத்துவிட்டோம். இப்படி அவ்வழியை அடைத்துக் காவல் செய்துவிட்டு, கதிரவன் புதல்வனாகிய இச்சுக்கிரீவனைக் கொணர்ந்துஇம்மலையில் வாழ்கின்ற காலத்தில் அங்கே வாலியானவன் மாயாவியின் உயிரைக் குடித்துவிட்டான். இப்படி பிலத்தினுள் ஒளித்த மாயாவியின் உயிராகியகள்ளைக்குடித்த மனங்களித்த வாலியும் விரைவாகவந்து வழி அடைபட்டிருப்பதைப் பார்த்துத் தன் தம்பியைக் கூப்பிட மறுமொழி பெறாதவனாய் "நம் தம்பியார் வாயிலிலிருந்து காவல் செய்தவிதம் அழகாயிருந்தது" என்று வாலையுங்காலையுந் தூக்கிப் பெருங்காற்று எழுந்ததுபோல் உதைத்துத் தள்ளின அளவில் அம்மலைகள் எல்லாம் ஆகாயத்தைச் சிலவும் கடலைச்சிலவும் சென்று சேர்ந்தன. பிறகு அவ்வாலி பிலத்தினின்றுவெளியேறிக்கண்டோர் நடுங்கும்படி கோபித்து இம்மலை யுச்சியை அடைதலும், சத்தியமார்க்கம் செல்பவனும் களங்கமற்ற மனமுடையவனும் ஆகியஇந்தச் சுக்கிரீவன் வந்து அவனடி வணங்கினான்.

வணங்கி யண்ணிநின் வரவி லாமையால்
உணங்கி யுன்வழிப் படர வுன்னுவேற்
கிணங்க ரின்மையா லிறைவ நும்முடைக்
கணங்கள் காவலுன் கடமை யென்றனர்.

[வணங்கி, அண்ணனே நீ வரவில்லையாகையால் நான் மனம் வருந்தி நீ சென்ற வழியே வருவதற்கு எண்ணிய என் எண்ணத்திற்கு, தலைவா, உம்முடைய மந்திரிமார் முதலிய கூட்டத்தார் இணங்காமையால் என்னை நோக்கி 'இவ்வரசினைக் காத்தல் உன் கடமையாம்' என்றனர்.]

ஆணை யஞ்சியிவ் வாசை யெய்திவாழ்
நாணி லாதவென் னவையை நல்குவாய்
பூணு லாவு தோளிணை பொறுயெனக்
கோணி னானெடுங் கொடுமை கூறினான்.

[அவர்களுடைய கட்டளையை மறுப்பதற்கு அஞ்சி, அந்த அரசாட்சியை ஏற்றுக்கொண்டு வாழ்ந்திருந்தவெட்கமில்லாத என் குற்றத்தை, ஆபரணங்களணிந்த தோள்கள் இரண்டு உடையவனே, பொறுத்தருள்வாய் என்று வேண்டவும், வாலியோ மனங்கோணி, பெரியகொடியவார்த்தைகளைக் கூறினான்.]

கூறி, வலிமிகுந்த தோள்களையுடைய அவ்வாலிக்குப் பயந்துகுடல் கலங்கிய வானரக் கூட்டமெல்லாம் பதுங்கி யொளியும்படி, முன் பாற்கடலைக் கடைந்த தன் கொடிய கைகளால் சுக்கிரீவனது உடலைக் குமைத்துக் கலக்கினான். இவன் அதற்காற்றாமல் மிகவருந்தினான். வருந்தி, ஏழு கடல்களுக்கும் அப்பாலுள்ள பூமியையும் கடந்து, அண்டங்களின் சுவரைச் சேர்ந்தான்; வாலியும் மிகவும் அலக்ஷ்யமாக, காற்றுச் சென்றாற்போலப் பூமியைச் சூழ்ந்த ஏழு சமுத்திரங்களையும் சிங்கத்தைப்போல் தாண்டித்தொடர்ந்தான்"

இவ்வண்ணம் மாருதி யியம்பிவருமளவில் இராகவன் இடையே வியந்து ஒன்று கூறினனெனுஞ் செய்யுள்கள் இரண்டு காணப்படுகின்றன.

என்று கான்மக னியம்ப வீசனுந்
நன்று நன்றெனு நனிதொ டர்ந்துபின்
சென்ற வாலிமுன் சென்ற செம்மரு
னன்று வாவுதற் கறிந்த னன்கொலாம்.

[என்று வாயுவின் புத்திரனுகிய அனுமன் சொல்லவும், இராமபிரானும், "நன்று நன்று! மிக வேகமாகப் பின்தொடர்ந்துவந்த வாலிக்குமுன் சென்ற இச்சுக்கிரீவன் தான் அன்றையதினம் தாவிச் செல்வதற்கு நன்கு அறிந்துகொண்டான் போலும்," என்று]

இனைய வாலியந் திளவ றன்னெடும்
வனையும் வார்கழற் கருணை வள்ளல்பின்
பினைய வீரர்செய் தமையி யம்பெனப்
புனையும் வாகையான் புகறன் மேயினன்.

[அணிந்த பெரிய வீரக்கழலையுடைய கருணைவள்ளலாகிய இராமபிரான், இளையவனுகிய இலக்குவனுடன் இவ்வாறு அதிசயித்து, அநுமனைநோக்கி, "இத்தகைய வீரர்களாகிய இந்த வாலியும் சுக்கிரீவனும், பின்பு செய்ததைச் சொல்" என்று வினவ, அணிந்த வெற்றிமாலையை உடையவனுகிய அனுமான், சொல்லலாயினன்]

வாலிக்கு முன் ஒடிய சுக்கிரீவன் அந்நாள் மிக நன்ருக ஓடக் கற்றுக்கொண்டு இருத்தல்வேண்டும், அல்லது, அவன் வாலிக்கு ஓட்டம் கற்பித்திருத்தல் வேண்டும், என்று பொருள்படவல்ல இவ்விருவகையிலும் இராமனது வியப்பன்றி, அவன் பரிபவம் விளையப் பரிகசித்த பரிசே இதனல்தோன்றுகின்றது. இளிவந்த இப்பரிகசத்திற்கு இலக்காகவல்ல நிலையில் பாவம் அந்தச் சுக்கிரீவன் இல்லை; இராமனும் பரிகசம் செய்கின்ற பதவியில் இப்பொழுது இல்லை. செவ்விகடந்த செய்யுளொன்று இவ்வண்ணம் கம்பர் செருகினரென்று கருதல் அரிது. வெள்ளியம்பலவாணத் தம்பிரான்றன் கைவிணை இவையென மதிப்பார் சிலர். அது தக்கதே. பின்னைய செய்யுளின்கண் அமைந்துள்ள மோனை எதுகைகளுமே அது கம்பருடைய கவி அன்று அன்று என்னப் பறை சாற்றுகின்றன. முதலடியிலும் மூன்ருமடியிலும் 'இனைய' என்னும் ஒரே சொல் ஒரே பொருளில் எதுகைக் கமைந்ததும், முதலடியில் மோனையின்பொருட்டே 'இளவலும்' வியக்க நேர்ந்ததும், எதுகையின் பொருட்டே இங்கு அனுமன் வாகை புனைந்ததும், இரண்டாமடியின் ஈற்றில் 'பின்பு' என்னுஞ் சொல் உடைந்து மூன்ருமடிக்கு முதலாகப் புகுந்ததும், மூன்ருமடி வகையுளியாக அலகுபெறுவதும், பொருளின் வெண்மையும், அனைத்துஞ் சேர்ந்து, இது வெள்ளிப்பாட்டே யென்று காட்டிக்கொடுத்துவிடுகின்றன. இவைகிடக்க, அனுமன் இயம்பிவந்த சரிதத்தைத் தொடர்வோம்—

"அவ்வண்ணம் ஓடி, முதலைகளையுடைய ஏழுகடல்களுக்கும் அப்பால் சேர்ந்தபொழுது, சிவந்த உருவமுடைய ஒப்பில்லாத ஒளியுடைய சூரியனது பிரகாசமும் எட்டாத சக்ரவாளகிரிக்கு மப்புறம் அவ்வாலி அடைந்து விரைவிலே சுக்கிரீவனைப் பிடித்துக்கொண்டான். பிடித்துக்கொண்டு பழிக்குச்சிறிதேனும் அஞ்சாதவனுய், கொடிய கோபம்முதிர்ந்துநின்றதன் வலிமையுடைய கையினல் மோதுவதற்கு உயர எடுத்து எழும்பின அளவில், அவ் வாலி சற்றே அயர்ந்ததொரு சமயம்பார்த்துச் சுக்கிரீவன் தப்பி ஓடிவிட்டான்.

எந்தை மற்றவன் னெயிற துக்குமே
லந்த கற்குமோ ரரணு மில்லையா
லிந்த வெற்பின்வந் திவனி ருந்தனன்
முந்தை யுற்றதோர் சாப முண்மையால்

[பெருமானே, அவ்வாலி கோபமுடன் தன் பற்களால் உதட்டை அதுக்குவானுனல் யமனுக்கும் ஒளிந்துபிழைக்க ஓர் இடம் இல்லை. ஆயினும், வாலி முன்னே அடைந்தசாபம் ஒன்றுஇருப்பதால், சுக்கிரீவன், இந்தமலையை அடைந்து பிழைத்திருக்கின்ருன்.]

உரிமை யென்றிவற் குரிய தாரமாம்
அருமருந்தையும் மவன்வி ரும்பினன்
இருமை யுந்துறந் திவனி ருந்தனன்
கருமமிங்கிதே கடவு ளென்றனன்

[சுவாமியே, இச்சுக்கிரீவனுக்கு உரியவளான மனைவியாகிய அருமருந்து போன்ற ருமை என்பவளையும் அவ்வாலி விரும்பிக் கவர்ந்துகொண்டான். இப்படி இச்சுக்கிரீவன் இம்மையையும் மறுமையையும் இழந்து இருக்கின்ருன். இதுவே நடந்த செய்தி]

என்று அநுமன், துவக்கிய வரலாற்றினை முடிவிற்குக் கொணரலானன்.

# இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

[247-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 2. களம் 1.

இடம்:—ஹார்ட்காஸல் மனையில் ஓர் அறை.

முறையறியாத வேலைக்காரர் நாலைந்துபேர்களுடன் ஹார்ட்காஸல் வருகிருர்.

ஹார்ட்:—நல்லது, இந்த மூன்று நாட்களாய் நான் சொல்லித்தந்தபடி பரிமாறி உபசரிக்கிறதைப்பற்றிய பாடங்களை யெல்லாம் தேர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் காரியம் எது, நீங்கள் இருக்க வேண்டிய இடம் எது என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். விருந்தாளிகள் நம் வீட்டிற்கு வந்து பழகியிருக்கிறீர்கள் என்பதை உங்கள் நடத்தையால் காட்டவேண்டும்; தெரியுமா?

எல்லோரும்:—தெரியும், தெரியும்.

ஹார்ட்:—யாராவது வந்தால் நீங்கள் கழுத்தைநீட்டிக் கண்களை விழித்துநின்று, பிறகு பயந்தோடும் முயலைப்போல் குடுகுடு வென்று உள்ளே ஓடிவரப்படாது.

எல்லாரும்:—மாட்டோம், மாட்டோம்.

ஹார்ட்:—ஏ, டிக்கரீ, ஏடா, ஏ, ஏற்றமரத்திலிருந்து இறங்கிவந்திருப்பவனே; இங்குவா, நீ எப்பொழுதும் விருந்தாளிகள் கூப்பிட்டகுரலுக்கு ஏனென்ன வேண்டும், தெரிந்ததாடா; ஏ, ரோஜர் ஏடா, படைச்சாலைவிட்டு வந்திருப்பவனே, நீ எப்பொழுதும் என் பக்கத்திலே இருக்கவேண்டும். சீ, கைகளை இப்படி இடுப்பில் வைத்துக்கொண்டு நிற்கப்படாதடா; சீ! சீ! ஏ, மடையா, தலையைவிட்டு எடுவடா உன் கைகளை, டிக்கரி தன் கைகளை எப்படி வைத்திருக்கிருன் பார்; அதுவுங் கொஞ்சம் விறைத்திருக்கிறது, இருந்தாலும் பரவா இல்லை.

டிக்கரி:—பார், நான் எப்படி வைத்திருக்கிறேன் பார். நான் சிப்பாய்வேலையில் இருந்தபோது இப்படி வைத்துக்கொள்ளக் கற்றுக்கொண்டேன். அங்கே ஒரு நாள்......

ஹார்ட்:—ஏ, டிக்கரி, இப்படி வாயாடப்படாது. விருந்தாளிகள் நோக்கத்தையே கவனித்துக்கொண்டிருக்கவேண்டும். நாங்கள் பேசுவதைக் கேட்கலாம், ஆனல், நீங்களோ கூடக் கூடப் பேசுவதற்கு ஆரம்பித்துவிடக்கூடாது. நாங்கள் குடிப்பதைப் பார்க்கலாம்; ஆனல், நீங்களும் குடிக்கவேண்டுமே யென்று நினைக்கப்படாது. நாங்கள் தின்பதைப் பார்க்கலாம், நீங்களும் தின்ன நினைக்கலாகாது.

டிக்கரி:—கடவுள் சாக்ஷியாக, எசமானே அது மட்டும் ஒருபோதும் முடியாது. சாப்பாடு நடப்பதை டிக்கரி பார்ப்பானுனல், தனக்கும் ஒரு வாய் கிடைக்காதா என்று நினைக்கத்தான் நினைப்பான்.

ஹார்ட்:—ஏ, மடையா! சமையற்கட்டில் தொந்தி நிறைந்தாலென்ன, கூடத்தில் உன்தொந்தி நிறைந்தாலென்ன! அதை நினைத்து, உன் வயிற்றை அடக்கி வை.

டிக்கரி:—புத்தி வந்தது,முதலிலேயே சமையலறையில் கிடைத்ததைத் தின்றுவிட்டுப் பிரயாசைப்பட்டு எப்படியாது என் வயிற்றை அடக்கி வைத்துக்கொள்ளப் பார்க்கிறேன்.

ஹார்ட்:—டிக்கரி, ஓயாமல் வாயாடுகிறாய் நீ. அப்புறம், சாப்பிடும்போது நான் ஏதாவது விளையாட்டாய்ப் பேசினுலும் நல்ல கதை எதுவாவது சொல்லநேர்ந்தாலும், நீங்களும் விருந்தாளிகளுடன் விருந்தாளிகளாய்ச் சேர்ந்துகொண்டு விழுந்து விழுந்து சிரிக்கப்படாது; தெரியுமா?

டிக்கரி:—அப்படியானல், சாமி, நீங்கள், புதுமாப்பிள்ளை மாமியார்வீட்டுக்குப் போன கதையைச் சொல்லப்படாது; அதைக்கேட்டால், உயிர் போனுலும், சிரிக்காமல் இருக்க என்னல் எப்படி முடியும். ஹி! ஹி! ஹி!! இந்த இருபது வருஷங்களாய் அந்தக் கதையைக் கேட்டுக் கேட்டுச் சிரித்திருக்கிறோம் - ஹி! ஹி! ஹீ!!

ஹார்ட்:—ஹ! ஹ! ஹ! நிரம்ப நல்ல கதைதான் அது. நல்லது, அந்தக் கதையை நான் சொல்வேனுல் நீ சிரிக்கலாம். விருந்தாளிகளை மாத்திரம் கவனித்துக்கொள்ளுங்கள். நல்லது, விருந்தாளிகளில் ஒருவர் தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள், அப்பொழுது என்னசெய்வீர்கள்? கொஞ்சம் தண்ணீர் வேண்டுமையா-[டிக்கரியைப் பார்த்து] ஏனடா அசையமாட்டேனென்கிறாய்?

டிக்கரி:—ஐயோ, சாமி, தின்பண்டங்களை எல்லாம் கண்ணில் பார்க்கிறவரையில் எனக்கு ஒன்றுங் கை கால் ஓடுவதில்லை. அப்புறம் சிங்கந்தான் நான்.

ஹார்ட்:—என்ன விதி! ஒருவனுவது ஆசையமாட்டானு?

வேலையாள்களில் ஒருவன்:—நான்தான் இந்தஇடத்தைவிட்டுப் போகப்படாதே.

இன்னொரு வேலையாள்:—அதுதான் என்வேலை அல்லவே.

மற்றொரு வேலையாள்:—என் வேலையு மல்ல, நிச்சயம்.

டிக்கரி:—அட இழவே, இது என்வேலையாகவும் இருக்கமாட்டாது.

ஹார்ட்:—அடெ, களிமண் தலைகளா! பெரிய மனிஷர்போல நீங்கள், என்வேலை உன்வேலை என்று இப்படிச் சச்சரவு செய்துகொண்டிருப்பதற் கிடையே, விருந்தாளிகள் நாக்கு வறண்டுபோக வேண்டுமோ! அடெ; மடப்பிணங்களே, அத்தனையும் அடியைப் பிடித்து மீளவும் ஆரம்பிக்கவேண்டும்போ லிருக்கிறதே. வண்டி வரும் ஓசையல்லவா கேட்பது? தடிப்பயல்களே, உங்களுங்கள் இடத்திற்கு ஓடுங்கள்!நான் போய், என் பழைய நண்பரது புதல்வனை வாயிற்படியண்டையே வரவழைப்பேன்.

[ஹார்ட்காஸல் போகிறார்]

டிக்கரி:—அட இழவே; என் இடம் அடியோடு மறந்துபோய்விட்டதே.

ரோஜர்:—எங்கேயும் இருக்கிறது என் இடம்.

ஒருவேலையாள்:—சனியன், என் இடம் எங்கே?

வேறொரு வேலையாள்:—என் இடம் எங்கும் இல்லை. என் வேலையைப் பார்த்துக்கொண்டு போகிறேன் நான்.

[கலக்கங்கொண்டுஅங்குமிங்கும்அலைந்தவர்களாய்க் கலைந்துவிடுகின்றனர். வேறு சில வேலைக்காரர்கள், மார்லோவையும், ஹேஸ்ட்டிங்ஸையும் விளக்குக்காட்டி அழைத்து வருகின்றனர்.]

வேலையாள்:—வாருங்கள், சுவாமி, வாருங்கள். இப்படி இப்படி.

ஹேஸ்ட்:—இன்றைய தினம் பட்ட பாடெல்லாம் தீர, உணவும் படுக்கையும் கொடுக்க இங்கே அழைக்கிறார், மார்லோ. இவ் வீடு நன்றாக இருக்கிறதே; பழையது, ஆனுலும் கௌரவமானது.

மார்லோ:—பெரிய மாளிகைகளின் கதியெல்லாம் இப்படித்தான். பெருஞ் செலவால் முதலில் வீட்டுக்காரனைப் பாழாக்கிவிட்டுப் பிறகு, சாப்பாட்டுக்கடையாகிக் காசுபறிக்க ஆரம்பித்துவிடுகிறது.

ஹேஸ்ட்:—இந்த அலங்காரச் செலவிற் கெல்லாம் நம்மைப்போன்ற பிரயாணிகளிடத்தில் வரிபோட்டு வாங்கிவிடுகிறார்கள். சலவைக்கல் தரையும் சன்னகாரைச் சுவரும், கணக்கில் சேர்த்துக் காட்டாவிட்டாலும் செலுத்தவேண்டிய தொகையைப் பெருக்கிவிடக் கண்டிருக்கிறேன்.

மார்லோ:—எந்த இடத்திலும் பிரயாணிகள் பணம் செலவுசெய்துதான் தீரவேண்டும். வித்தியாசம் என்னவென்றால், நல்ல விடுதிகளில் உனக்கு வேண்டிய சவுகரியங்களை அதிக விலைகொடுத்துப் பெறுகின்றாய்; கெட்ட விடுதிகளிலோ, வயிற்றையும் வற்றப்போட்டு ஆளையும் உறிந்துகொண்டுவிடுகிறார்கள்.

ஹேஸ்ட்:—உனக்கு நல்ல அனுபவம் இருக்கின்றது, மார்லோ. உலகத்தை இத்தனை பார்த்திருக்கிற நீ, இயற்கையான நல்லறிவும் உடையவனுயிருந்தும், உனக்கு வாய்த்திருக்கின்ற சந்தர்ப்பங்கள் பலவாயினும், ஏன் தன்னம்பிக்கை இல்லாமல் இவ்வளவு கூச்சமுடையவனுக இருக்கிறாயோ என்பதை நினைத்து நான் ஆச்சரியம் அடைவதுண்டு.

மார்லோ:—ஆங்கிலேயருக்கெல்லாம் உரியது இந்த நோய். இருப்பினும், நீ பேசுகிற 'இந்தத் தன்னம்பிக்கைத் தைரியத்தை நான் எங்கே கற்றுக்கொண்டிருக்

கக்கூடும், சொல்? மானுடப் படைப்பின் வனப்புடைய பாகமாகிய மாதரே, முக்கியமாக ஆடவர்களுக்குத் திடபுத்தியும் நம்பிக்கையும் கற்றுத்தரவல்லவர்கள். அவர்களுடைய உறவில்லாமலே என் காலமெல்லாம் கலாசாலைகளிலும் சாப்பாட்டு விடுதிகளிலும் கழிந்துவிட்டது. கௌரவமான மாது ஒருத்தியுடன் நான் இதுகாறும் சிநேகம் செய்து அறியேன். ஆனால், மற்றவகைப் பெண்மக்களிடையோ, உனக்குத்தான் தெரியுமே—

ஹேஸ்ட்:—ஆம் ஆம், அவர்களிடையே, நீகாட்டும் துணிச்சலுந் துடுக்குந்தான் சகிக்கமுடியாதே!

மார்லோ:—இவர்களெல்லாம் நம்மைச் சேர்ந்தவர்களோ அல்லவோ!

ஹேஸ்ட்:—கௌரவமான குடும்பத்துப் பெண்களிடையே, உன்னைப்போல் மடையன், துடைநடுக்கி, நான் கண்டதே இல்லை. அவர்களைவிட்டு எப்பொழுது ஓடலாம் என்று சமயம் பார்த்துக்கொண்டிருப்பவன் போலவே தோன்றுகின்றாய்.

மார்லோ:—தோன்றுவானேன்- ஓடத்தான் பார்க்கிறேன். ஒவ்வொரு சமயம், எப்படியாவது என் வாய்ப் பூட்டை அவிழ்த்து, 'லொட லொட' வென்று பேசித்தான் விடுவதென்று தீர்மானம் செய்துகொள்வதுண்டு; ஆனால், ஏனோ தெரியவில்லை, அழகிய கண்கள் இரண்டிலிருந்து ஒரு கூரியபார்வை வந்து பட்டவுடனே, என் தீர்மான மெல்லாம் உடைந்து விழுந்துவிடுகின்றது. துடுக்கான ஒருவன் அடக்க முடையவன்போல் பாசாங்கு செய்தாலும் செய்யலாம்; அடக்கமுடையவன்மாத்திரம் துடுக்குடையவன்போல் நடித்துவிடுவானானால், நான் என் கழுத்தை அறுத்துக்கொள்கிறேன்.

ஹேஸ்ட்:—வண்ணாத்திக்கும் வேலைக்காரிக்கும் நீ வீணே வீசுகின்றன இன்சொற்களில் பாதி நீ இவர்களிடம் பேசுவாயானால்.--

மார்லோ:—ஐயோ, ஹேஸ்ட்டிங்ஸ், இவர்களிடத்தில் இன்சொற் பேசுவதென்பது என்னால் இயலாதே. அவர்களைக் கண்டதும் நான் உறைந்துபோய்க் கல்லாய்ச் சமைந்துவிடுகின்றேன். வால்நக்ஷத்திரங்களென்றும் எரிமலை யென்றும் ஏதேதோ சொல்லுகின்றனர்; அவைகளெல்லாம் எனக்கு விளையாட்டுப் பந்திற்குச் சமானம். மரியாதையுடைய ஒரு பெண் அலங்காரமும் செய்துகொண்டு நிற்பாளே யானால், இந்த முழுச் சிருஷ்டியிலும் அவளைவிட மகத்தான பொருள் எனக்கு வேறொன்று மில்லை.

ஹேஸ்ட்:— ஹ! ஹ! ஹ! இப்படியானால், நீ எந்தக் காலத்தில் கலியாணம் செய்துகொள்ளக்கூடுமென்று எதிர்பார்க்கிறாய்.

மார்லோ:—அரசர்கள் மணப்பதுபோல், எனக்குப் பதிலாக என் மணைட்டியை வேறு யாராவது வரித்துக்கொடுத்தாலன்றி ஒருபோதும் இல்லை. இந்தியா போன்ற கிழக்குத் தேசங்களில், முன்பின் பார்த்திராத ஒருத்தியை எங்கிருந்தோ கொணர்ந்து 'இவள் தான் உன் மனைவி' என்று அறிமுகம்செய்வித்துகொள்கின்ற மாப்பிள்ளைபோல இருந்தாற்றான் சகிக்கமுடியும். இவ்வாறின்றி, காதலிகாதலியென்று பின்தொடர்கின்றபயங்கரக்களுக்கெல்லாம் ஆளாகி, அத்தைமார்களையும் பாட்டிமார்களையும், பொறுத்து, கடைசியில், "அம்மா, என்னை நீ கலியாணம்செய்துகொள்வாயா' என்ற அந்தக் கொட்டை கொட்டையாய் முதலிலிருந்து விழித்திருந்த கேள்வியைக் கேட்பதென்பது - இல்லை யில்லை - இந்த ஹிம்ஸை என்னால் தாங்கக்கூடிய தன்று.

ஹேஸ்ட்:—உன்னைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கின்றதே. இது கிடக்கட்டும். உன் தந்தை வேண்டியபடி நீ இப்பொழுது பார்க்கவந்திருக்கிற இப்பெண்ணினிடத்தில் எப்படி நடந்துகொள்வதென்று உத்தேசித்திருக்கிறாய்.

மார்லோ:—மற்றெல்லா நற்குலப் பெண்களிடத்திலும் எப்படி நடந்துகொள்கின்றேனோ, அப்படியே தான்; அசட்டுச் சிரிப்புச் சிரிப்பது, கேட்டவரையில் ஆம் இல்லை, என்று பதிற்சொல்வதோடு நின்றுவிடுவது. இதுதவிர, அவள் முகத்தை நிமிர்ந்துபார்க்கவும் துணிவேன் என்று நான் நினைக்கவில்லை.

ஹேஸ்ட்:—இத்தனை ஸரஸமான சிநேகிதனுக்கு இருக்கக்கூடிய நீ அத்தனை கடுகடுத்த காதலனாக ஏன் தான் கிடக்கவேண்டுமோ—ஆச்சரியம்.

மார்லோ:—என் அன்புடைய ஹேஸ்ட்டிங்ஸே, வெளிப்படையாகச் சொல்கின்றேன் கேள். உன்னுடைய இன்பத்தையே நடத்திவைப்பதற்கு நான் இவ்விடம் வரச் சம்மதித்தேன். நேவில்லி உன்னைக் காதலித்திருக்கிறாள். ஆனால், இந்தக் குடும்பத்தினர் உன்னை அறியமாட்டார். என்னுடைய நண்பன் என்ற முறையில் உனக்கு இங்கு நல்வரவு கிடைப்பது நிச்சயம். கௌரவமுடன் ஒழுக்கம் பிறழாமல் மற்றவைகளை நீ மானமுடன் முடித்துக்கொள்.

ஹேஸ்ட்:—எனதருமை மார்லோ! என் மனக்கிளர்ச்சியைச் சிறிது அடக்கிக் கொள்வேன். அவளுடைய ஆஸ்தியை அடித்துக்கொண்டுபோவதே நோக்கமாகவுடையஒரு அற்பக் கயவனேநானானால் இந்தஉலகத்தில் எல்லாரையும்விட்டு உன்னுடைய உதவியை அந்தக் காரியத்திற்கு நான் நாடுவேனோ. நான் வேண்டுவதெல்லாம்நெவில்லியே. இறந்துபோன அவள் தந்தையின் சம்மதத்தினாலும் அவளது விருப்பத்தினாலும் முன்னரே அவள் என்னுடையவளாகிவிட்டாள்.

மார்லோ:—பாக்கியசாலி நீ! எந்தப் பெண்ணின் மனத்தையும் கவர்ந்து கொள்ளவல்ல திறமையுங்கல்வியும் பெற்றிருக்கின்றாய் நீ. நானோ, பெண்பாலாரை ஆராதிக்கின்றேன்; ஆயினும், அவர்களில் நான் இகழ்கின்ற அக் கீழ்மகளிரிடத்திலேயே உறவுகொண்டு உரையாடும் விதியுடையவனாயிருக்கின்றேன். தத்தித் தத்தி நான் பேசும் இப்பேச்சும், கோணிக்கோணி இழுக்கும் என் மூஞ்சியும், தையற்காரியின் வீட்டில் வேலை செய்கிறவளையும், கூத்தாடி இராசாத்தியையும்விட உயர்ந்த ஒன்றிற்கு ஆசைப்படவோ என்னை விடப்போவதில்லை. சீ சீ; நம் பேச்சிற்குக் குறுக்கே வந்தானே இந்தப் பயல்.

கம்பராமாயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு, முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை. பால காண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரணிய காண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0. சுந்தர காண்டம் ரூ. 5. யுத்த காண்டம் 2-பாகம் ரூ. 10. தபால் செலவு வேறு.
கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

6-ம் பத்து, 5-ம் தசகம்.
[249-வது பக்கத் தொடர்ச்சி]

9-ம் பாசுரம்.

இரங்கி நாடொறும் வாய்வெ ரீயிவள்
கண்ண நீர்க ளலமர
மரங்க ளுமிரங் கும்வ கைமணி
வண்ணவோ வென்று கூவுமால்
துரங்கம் வாய்பி ளந்தா னுறைதுலை
வில்லி மங்கல மென்றுதன்
கரங்கள் கூப்பித் தொழுமவ் வூர்த்திரு
நாமங் கற்றதற் பின்னையே.

---

10-ம் பாசுரம்.

பின்னை கொல்நில மாம கள்கொல்
திருமகள் கொல்பிறந் திட்டாள்
என்ன மாயங்கொ லோவிவள் நெடுமா
லென்றே நின்று கூவுமால்
முன்னி வந்தவ னின்றி ருந்துறை
யுந்துலை வில்லி மங்கலஞ்
சென்னி யால்வ ணங்கு மவ்வூர்த்
திருநாமங் கேட்பது சிந்தையே.

9-ம் பாசுரத்துப் பொழிப்புரை - இவளைத் திருத்துலைவில்லி மங்கலத்திலே கொண்டுபுக்கு அவ்வூர் எம்பெருமான் திருநாமங்களை நீங்கள் கற்பிக்க இப்பிராட்டி கற்றபின் அவனைப் பிரிந்திருக்கின்ற வியஸநத்தாலே மனம்நொந்து நாள்தோறும் அவன் திருநாமத்தையே தன்நினைவுகூட அறியாமல் வாய்விட்டுச் சொல்லி அசேதநமான மரங்களுங்கூட இரங்கும்படி கண்கள் நீர்முட்டி மூடி, மணிவண்ணவோ என்று கூப்பிட்டழைத்து, கேசியென்ற பேர்பெற்ற குதிரை வடிவமெடுத்த இராக்ஷதனின் வாயைப் பிளந்து கொன்றபிரான் தன் சிரமமெல்லாம் தீரும்படி யெழுந்தருளியிருக்கிற வில்லிமங்கல மென்று சொல்லி, தன் கைகளைக் கூப்பித் தொழாநிற்கும். ஆதலால் அவ்வூர் கொண்டு புக்கு ஆவ்வூர்த் திருநாமத்தைக் கற்பித்துக் கொடுத்தீர்கள் என்கிறாள்.

குறிப்பு:—I முன்பு அரவிந்தலோசன னென்று கூவினாள், இப்போழ்து "மணிவண்ணா"—ஸர்வ சுலபன், அதாவது ஆச்ரிதர் இட்ட வழக்கு—என்கிறாள்.

II. வாய்வெரீ-இப்பிராட்டி தன் வாயைத் திறவாதிருக்க அதுவாகவே ஆற்றாமைபற்றி அவளையறியாமல் திறந்து கூவுகிறது என்று தாத்பரியம்.

III. இந்தயோசனையில் (2)-(3) பாசுரங்களில் முன்பு உரைத்ததையே திரும்பித் தோழி மற்றொரு பிரகாரமாய்ச் சொன்னதாக ஆகிறது-இதுபற்றி மற்றொரு விதமாய்ப் பொருள்கொண்டால் புனர்உக்தி தோஷம் நீங்கி அடுத்த பாசுரத்துக்கும் இணக்கமாய் ஒத்துப்போவதை இங்கு வரைவோம்.

IV. மற்றொரு யோஜனை—"திருநாமம் கற்றதன் பின்னையே" என்று மூலம்; யார் கற்பித்தவர் என்று கூறியில்லாமைபற்றி இப்பாசுரங்களை எல்லாம் கட்டுரைக்கும் தோழியே கற்பித்தாள்; பிராட்டி அது கேட்டுப்பின் திருநாமத்தைக்கூட அநுஸந்தித்துப்பாடம் கற்றாளென்று சொன்னால் நன்றாகப் பொருந்தும். இப்படியானால் தாய்மார்களை 2-ம் பாசுரத்தில் காகதாளி நியாயத்தால் (அதாவது காக்கை உட்கார்ந்ததும் பனம்பழம் விழுந்ததும் தொடர்ந்தது போல்) இப்பிராட்டியை நீங்கள் மங்கலம் கொண்டு போனதே நீங்கள் அவளை விட்டுவிட ஹேதுவாயிற்றென்று கூறியதாகும். 3-ம் பாசுரத்தில் இப்பிராட்டி எம்பெருமானுடைய வெகுவித திவ்விய சேஷ்டிதங்களை அநுஸந்திக்க நீங்கள் அவனைக் காட்டிக்கொடுத்ததே காரணமாயிற்று. உமக்கும் எனக்கும் இதுவே காரணம் பற்றி இப்பிராட்டியின் தேன்மொழியை நாமெல்லாம் கேட்க இனிமேல் வாய்க்காதபடி செய்து கொண்டீர்களென்றாள். இப்பாசுரத்தில்தோழி, நான் 2-ம் 3-ம் பாசுரங்களில் கூறியது ஒருவாறு உங்களைக் குற்றஞ் சாட்டியதாக ஏற்படுமானதால் அப்படியறியலாகாது. அதுமிகை - வஸ்து தத்துவ மதுவல்ல - நான் ஒருக்கால் ஏதோ நீங்கள் செய்தது போலவே இவளுக்குத் துலைவில்லி மங்கலத்தெம் பெருமான் திருநாமம் கற்பித்தேன். அவள் என் பின்னே அதை உச்சரித்தாள். அது வெகுமாதுரியமாயும் தழதழத்த மழலைச் சொல்போலும் ரஸமாயுமிருந்தது. நான்லஜ்ஜைபட்டு இவள்போல்எனக்குச்சொல்லவரவில்லையே என்று பிறகுஅந்தத்திருநாமத்தைச் சொல்லத் தவிர்ந்தேன். அதினின் பயன் என்னவாயிற்று என்று10-ம் பாசுரத்தில் குறிக்கிறாள். "அவ்வூர் திருநாமம் கேட்பது சிந்தையே" அதாவது இப்பிராட்டிக்குத்தான்மட்டும் திருநாமத்தை உச்சரிப்பதுபோதாது. தன்னோடு பிறர் யாராவது கூடச்சொன்னால் கேட்கலாமென்று ஆசைப்படுகிறாள். தோழியோ மேற்சொன்னபடி லஜ்ஜையால் சொல்வதை நிறுத்திவிட்டாள். ஐயோ அந்தோ! அவ்வூர் பகவானின் திருநாமத்தைச் சொல்பவர் ஒருவருமில்லையே என்று "சிந்தை", அதாவது, எப்போழ்தும் அடிக்கடியும் நினைத்து வியஸநிக்கிறாள். இதினால் என்னவாயிற்றென்றால் "நான் விவேகித்துப் பார்த்ததில் உங்கள் செய்கையாலல்ல நமக்கு வந்த இழவு" என்று தோழி தன் தீர்மானத்தை முடிவாக இங்குச் சொல்லி முடிக்கிறாளென்று ஆயிற்று. திருநாமத்தைச் சொல்லாமல் "அவ்வூர்" என்று சொன்னது தோழி தன் வெறுப்பை உணர்த்தியபடியென்று கொள்ளவேண்டும்.

பதக்குறிப்புக்கள்:—முன்வந்து இப்பிராட்டியை நாயகியாகக்கைப்பற்றவேண்டுமென்ற திருவுள்ளத்தால் பகவான் துலைவில்லிமங்கலத்தின்கண் அவள் பிறப்பதற்கு முன்னரே கோயில்கொண்டான் என்று திருவுள்ளம். அவன் "நின்று இருந்து உறையும்" என்பதால் இந்தத் திவ்யக்ஷேத்திரத்தின்கண் "நின்றகோல"த்திலும் "இருந்த - வீற்றிருந்த" கோலத்திலும் இருமூர்த்திகளாக எழுந்தருளியிருக்கிறானென்று ஏற்படுகிறது.

இப்பிராட்டி (a) திருநாமத்தைக் கேட்கச் சிந்தை வைக்கும்(b)சென்னியால் வணங்கும்(c)"நெடுமால்" அதாவது ஆச்ரிதரைநெடுங்காலம் கைவிடாமல்ஆசைப்பட்டு ஆதரிக்கும், என்று மூன்றுவிதம் பாசுரம்குறிக்கிறது. இப்படி முற்றும் முதல்துடங்கி இப்பிராட்டியத்தநிப்பதால் இவள் நல்பின்னை அதாவது(1)"நீளா

பிராட்டியோ" (2)"பூமி பிராட்டியோ" (3) திருமாமகளாகிய இலக்குமி பிராட்டியோ வென்று இவள் முளைக்கும்போழ்தே பகவானிடத்தில் காணிக்கும் விடாத ஆதரவால் தெளிவாகிறது. இத்தகையவளை இழக்கத் தொல்லைவில்லி மங்கல ஸர்வேசுவரனாலும் ஆகுமோ? ஆகவே முன்கூட்டியே அவன் இவளைத்தான் மணந்துகொள்வதின் நிமித்தமாக அங்குக் கோயில் கொண்டான் - இப்படிக்குப் பகவான் ஒரு இளம் பெண்ணிடத்தில் ஆதரவும் அதிசயமும் செய்யவல்லனென்றுசொல்லவகையுண்டோவென்னில், பகவான் "மாயாவி" அதாவது அவன் பிறரிடத்தில் காணக் கூடாத ஆச்சரியசக்தியுள்ளவனல்லவோ? ஆகையால் தான் சொல்லத் தட்டில்லை என்கிறாள் தோழி.

---

11-ம் பாசுரம்

சிந்தையா லுஞ்சொல்லா லுஞ்செய்
கையினாலுங் தேவ பிரானையே
தந்தை தாயென் றடைந்த வண்குரு
கூர வர்சட கோபன்
முந்தை யாயி ரத்துள் ளிவைதலை
வில்லி மங்கலத்தைச் சொன்ன
செந்தமிழ்ப் பத்தும் வல்லா ரடிமை
செய்வார் திருமா லுக்கே.

பொழிப்புரை:—வாக்காலும் மனத்தாலும் தேகத்தாலும் தேவபிரானையே தந்தை என்றும் (அதாவது பகுத்தறிவு கொடுத்துக் காப்பாற்றும் பிதாவாகவும்) தாய் என்றும் (அதாவது குணாபேக்ஷையில்லாமலே எக்குற்றஞ் செய்யினும்காப்பாற்றும் மாதாவாகவும்) சரணமடைந்த குருகூர் நிர்வாஹகரான சடகோபன் சொன்ன ஸகலஸாரபூதமான ஆயிரந்திருவாய்மொழியிலும் வில்லிமங்கலத்தைச்சொன்ன செந்தமிழ் இப்பத்துங் கற்றவர் வைகுண்டத்துக்குப் போய் இலக்குமிக்கும் மாலுக்கு மடிமை செய்வார்கள்.

குறிப்பு:—முந்தை-அநாதியானது; இதற்கு முன்னதாக மற்றொரு வஸ்து இருந்ததாக அறிவில்லாதது, வேதம். திருவாய்மொழி தாம் அருளிச் செய்த ஆயிரத்தை "முந்தை ஆயிரம்" அதாவது ஆயிரமான தமிழ் வேதம் என்று பொருள்படக் கூறுகிறார்.

விசேஷக் குறிப்பு:—தன்னிடத்தில் ஆசைப்பட்டுப் பக்தி செய்பவர்களைப் பகவான் இதரபந்துக்களையும் கூட விட்டுவிடும்படி செய்கிறான் என்று இப்பத்தில் ஆழ்வார் அருளிச்செய்கிறார்.

---

# இரவீந்திரநாதர் கட்டுரைகள்

## மனுஷத்வம்

[254-வது பக்கத் தொடர்ச்சி]

**து**ன்பமே மனிதனுடைய சிந்தையை விசாலமாக்குகின்றது. மனிதன் தான்விசாலமடையவேண்டிய விஷயங்களின் சம்பந்தமான சிந்தனையொழிந்து தூங்காமல் அவனை எப்பொழுதும் விழிக்கவைத்திருப்பது இத்துன்பம். அன்றியும், இவ் விசால சிந்தையே மனிதனை ஆநந்தத்தின் அதிகாரி ஆக்குகின்றது. இதற்குக் காரணம் யாதெனில், "பூமைவ சுகம், நால்பே சுகமஸ்தி" (பெருமையே சுகம், சிறுமையில் சுகமோ இல்லை) என உபநிடதம் கூறும். எவைகள் நம்முடைய அழுக்காறு முதலிய சிறுமைகளைக் காட்டுகின்றனவோ, அவைகளால், களிப்புச் சில கைகூடலாமாயினும், ஆனந்தம் அடைவதென்பதில்லை. வீரத்தால் விளையாதனவும், கண்ணீரின் மூலமாகக் கைகூடாதனவும், வருத்தமின்றி வாய்த்தனவும், நமக்கு என்றும் சம்பூரணமாய்ச் சித்தித்தபடி ஆகா. துன்பங்களுக்கு ஆளாகிக் கடிய சாதனைகள் மூலமாக எவ்வெவைகளை அடைகின்றோமோ, அவைகளையே நம் இதயம் நெருங்கிய நட்போடும் பரிபூரணமாகவும் அடைகின்றது. மனுஷத்வம் என்னும் இது பரம துக்கத்தின் மூலமாக நாம் அடைகின்றவொரு ஒப்பில்லாச் செல்வம். வீரத்தாலன்றி அதனை அடைதல் இயலாது. நம்முடைய வாழ்க்கை நெறியில் மீண்டும் மீண்டும் குறுக்கிடும் இடையூறுகளனைத்தையும்புறங்கண்டு கொள்ளோமாயின், அம்மனுஷத்வத்தை அடைந்தது போல்தோன்றினும் உண்மையில் அடையாதவர்களே ஆவோம். எளிதில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாமாயின் நம்முடைய இதயம் அதனைப் பூரணமாகக் கிரகித்துக்கொள்ளமாட்டாது. மற்று, துன்பத்தின் மூலமே அடையக்கூடியன சில, மரணபயத்தையுங் கடந்து அடைய வேண்டுவன சில, ஆபத்திற்கு ஆளாகியே அடைய வல்லன சிற்சில, நானாத்திசையிலும் முகமுடைய மனோவிகாரங்களின் கொந்தளிப்பை அடக்கியே அடையலாவன சில. இன்னபடி, அந்தத் துன்பம் மரணபயம் ஆபத்து கொந்தளிப்பு முதலியவைகளின் மூலமாய் மனுஷத்துவத்தைச் சம்பாதித்துக் கொள்ளச் செய்கின்ற முயற்சியிற்றானே, ஆன்மாவின் சகலவிதமான சக்தியும் உபயோகப்பட்ட வண்ணமே இருக்கின்றது. இவ் வனுபவத்திலேயே அதன் உண்மையான ஆனந்தம் அமைந்திருக்கின்றது இவ்வனுபவத்தின் மூலமாகவே தன்னைப்பற்றிய உண்மையான அறிவை மனிதன் அடைகின்றான். துக்கமெல்லலாம் கடந்து நிமிர்ந்த சிரத்தினன்; மரணத்தை வென்று நின்ற நிலையினன். இவ்வண்ணமாகவே, இம்மையின் விசித்திரமானவிக்கினங்களுடனும் துயருடையதடைகளுடனும் புரிகின்ற ஓயாத போரினால் ஆன்மா தன் சக்திகளனைத்தும் உறக்காமல் விழிப்புநிலையடைந்து, முழுவீரமும் பிரகாசித்து எழுந்திருக்கும். அவ்வான்மாவே, பிரம்மத்தைப் பூரணமாக எய்துவதற்குரியபரிபக்குவத்தை அடைந்ததாகின்றது. அற்பமான சுகானுபவத்தோடே, சிற்றின்பவாழ்க்கையின் ஆடம்பரத்தினுள்ளே, எவ்வான்மா அசதியுற்று மயங்கிக் கிடக்கின்றதோ, அவ்வான்மாவிற்குப் பிரம்மத்தின் ஆனந்தம் உரியதன்று. "நாய மாத்மா பலகீநே நலப்ய" (ஜீவாத்மா வென்றாலும் சரி, பரமாத்மா வென்றாலும் சரி) இவ்வாத்மா பலவீனரால் அடையக் கூடியதன்று—என்று உபநிடதத்தில் கூறியிருப்பதன் காரணம் இதுவேயாம். தன் சக்தியடங்கலும் உபயோகப்படுத்தவேண்டிய தருணங்கள் வாய்க்க வாய்க்க, ஆன்மாவைப் பரிபூரணமாக அடையக் கூடிய செவ்வி கிடைக்கும். இதுபற்றியே, புஷ்பங்கள் மலர்கின்ற அத்துணை எளிதாய் மனிதர் மனுஷத்வம் அடைவது இயலாததாகின்றது. மனுஷத்வத்தின் மூலமாக ஒருவன் அடையவேண்டியவைகளை

நித்திராவஸ்தையில் அடைய முடியாது. ஆதலின், இம்மைக்கு இயற்கையானமிகக்கடிய இடையூறுகள், மீண்டும் மீண்டும், "உத்திஷ்டத! ஜாக்ரத! ப்ராப்ய வரான்நிபோதத! க்ஷுரஸ்ய தாரா நிஷிதா துரத்யயா, துர்கம் பதஸ்தத் கவயோவதந்தி"—(எழுந்திரு, விழித்துக்கொள், ஏற்ற குருவிற்குச் சீடனாகி, ஞானத்தைச் சம்பாதித்துக் கொள். அவ்வழி நாவிதன் கத்தியின் கூர்மையைப் போன்ற கஷ்டமுடைய தென்று கவிவரர் கூறுவார்) என்னும் இவ்வாக்கையே எடுத்துரைக்கின்றன.

இவ்வாறாக, விடியற்காலத்தில், வனங்களிலுள்ள மலர்களுக்குந் தளிர்களுக்கு மிடையே, அவைகளின் அற்ப சம்பூரணமும் இயற்கையான அழகும் மலர்கின்றன. அப்பொழுது மனிதனானவன், தான் வருந்தி யடைதற்குரிய நெறியையும், தனது சுகதுக்கங்களையும் பற்றிய தன் விசாலமான அளவிடற் கரிய பெருமையின் மகத்துவத்தை விசித்திரமான ஆனந்த சங்கீதமாகப் பாடமாட்டானோ! அவ் வைகறையில், செடிகளின் கொடிகளின் இடையே, மலர்களின் பொலிவும் இலைகளின் அசைவும், புட்களின் இசையும் ஒருபுறம்; மறுபுறமோ பனிநீரால் பரிசுத்தமான பிரகாசமுடைய அதே வைகறையில், மனித சமூகத்திலோ ஸம்ஸாரம். இதுவே இவன்யுத்தகளம். வனப்புடைய அவ்வைகறையில், உத்தரீயத்தை அரையிற் கட்டினவனாய் வெற்றியை எய்தும் வண்ணம், அன்றன்று அவனவன் செய்துவரும் செயற்கரிய கருமத்தின் முயற்சியுடைய பாதையில் விரைந்து செல்லவேண்டும். ஓர் காதலி தன் நாயகனை எத்துணை உவந்து மகிழ்ந்து அழைத்துக்கொள்கின்றாளோ, அவ்வணமே ஒருவன் கஷ்டநஷ்டங்களையும் உவந்துவரித்துக்கொள்ளவேண்டும். சுகதுக்கங்களின் கொந்தளிப்பான அலைகளுக்குமேலாக நம் வாழ்க்கையாம்ஓடத்தைச் செலுத்திப் போகவேண்டும்——ஏனென்றால், மனிதன் மகத்தானவன்; இது ஏனெனில், "மனுஷத்வத்தை அடைவது மிகவுந் துர்லபம், அதனை அடைகின்றபாதை மிகவும் கஷ்டமானதென்று சான்றோர் சொல்கின்றனர்."

ஆயினும், இம்மையிலேயே தன்வரையிலேயே ஒருவன் வாழ்க்கை முடிவு அடைவதாயின், அவனது இடையூறு இடுக்கண்களின் பாரம் அந்தமற்ற அளவினதாகி நிற்கும்; அதன் நேரான தாதரத்தினை அவன் அறியமாட்டான். அவ்வாறாயின், இம் மாபெரும் பாரத்தை யார்தான் சுமப்பதற்கு இசைவார்? எதற்குத்தான் சுமக்கவேண்டும்? நதியின் ஒரு கோடியில் அமைதி தங்கிய கடலும், மறுபுறம், நோக்கமும் அமைதியும் அற்றுத் தூரதேசங்களிலிருந்து பொருது வருகின்றநீர்ப்பாய்ச்சலும் உள. அவ்வண்ணமே நமக்கும், ஒரே சமயத்தில், ஒருபக்கம் பிரம்மத்தினுள் ஆறுதலும் மறுபக்கம் இம்மையின் ஓயாத ஓட்டமுமில்லாவிடில், இவ்வாழ்க்கையில்இருந்து விவகரிப்பதற்குப் பொருளொன்றும் இல்லாமற் போய்விடுவதுடன்,முழுவன்மையுடன் மேற்கொள்ளும் முயற்சிகளனைத்தும் பித்தமயக்கமேபோல்தோன்றும். நம்முடைய கருமத்தின் குறியெல்லாம் பிரம்மத்தினுள்—அது நிறைவடைவதும் பிரம்மத்தினிடத்தே. பிரம்ம நிஷ்டை யுடையவனே கிரஹஸ்தன் ஆவான் என்று நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. "யத்யத் கர்ம ப்ராகுர்வீத தத்ப்ரம்மணி ஸமர்ப்பயேத்"(எந்தக்கர்மத்தைச் செய்ய வேண்டியிருந்தாலும் அதனை அப்பிரம்மத்திற்கே அவன் ஸமர்ப்பணம் செய்யவேண்டும்). இதன் மூலமாகத்தான், கருமங்களுக்கிடையே அமைதியும், பிரயாசையில் சாந்தியும், துக்கத்தினுள் ஆனந்தமும் அடையக்கூடியனவாகும். இதன்மூலமாகவே நாம்நம்முடைய ஆன்மாவின்மீது அதிகாரம்பெறுகின்றோம் ஒருபுறம்; மறுபுறம் மீண்டும் அவ்வதிகாரத்தை நிமிடந்தோறும் இறையும்நில்லாமல்துறந்துதுறந்து நாம் அன்பினால் வரும் ஆனந்தலாபத்தை அடைகின்றோம்.

அன்பானது எதனையேனும் நல்கியவண்ணமாகவேயிருந்தாலன்றிப் பிழைத்திருக்க மாட்டாது. நம்முடைய கருமமும், அக்கருமத்தைச் செய்யுங் கர்த்தாவாகி நாமிருப்பதும் நமக்கு உரிமையானவைகளாய் இல்லாவிட்டால், பிரம்மத்தினிடம் நாம் முறைசெய்து துறப்பதற்கு நம்மிடம் வேறு என்ன இருக்கின்றது; மற்று, நம்முடைய பக்தி நிறைவேறுவது எங்ஙனம்? இம்மைவாழ்க்கையில், நம்முடைய காரியங்கள், அக்காரியங்களுக்குக் கர்த்தாவாயிருக்கும் தன்மை, ஆகிய இவ்விரண்டுமே நாம் கொடுக்கக்கூடிய கொடைகள். நம் சகலகர்மங்களையும் சகல கர்த்வத்தையும் மனமுவந்து பிரம்மத்தினிடம் சமர்ப்பிக்கும் போதுதான் நமது அன்பு முற்றிலும் நிறைவேறிய உன்னதநிலையை அடைகின்றது. இல்லாவிடில், கருமங்களனைத்தும் பொருளற்ற சுமையாகவும், அதிகாரமென்பதெல்லாம்உண்மையில் அடிமைத்தனமேயாகவும் முடியும். கற்புடைய மாதருக்குத் தம் புக்ககத்துக் காரியங்களே கௌரவமளிப்பன; அதுவே அவளுக்கு ஆனந்தம்; அக்காரியங்கள் அவளது உரிமையை அழித்து அடக்கிவைப்பன அல்ல. தன் கணவனிடத்தில் வைத்த பிரமையினுள்ளேயே அவள் ஒவ்வொரு நிமிடமும் முக்திலாபத்தை அடைகின்றாள். அவளுடைய பலவகையான கருமங்களனைத்தும் ஒற்றுமைபெற்று ஒன்றாவது அப் பிரமையினுள்ளேயே. அவளது நானாவிதமான துக்கங்களுக் கிடையே, அவள் ஆனந்தத்திற்கு உறைவிடமாயமைவதும் அப்பதிப்பிரமையே. அன்னவாறே, பிரம்மத்தின் ஸம்ஸாரமாகிய இப்பிரபஞ்சத்தில், நாம் பிரம்மத்தின் கர்மத்தையே செய்து, அக்கருமம் அனைத்தையும் அப் பிரம்மத்திற்கே ஒப்படைப்போமாயின், அப்பொழுதுதான் கருமத்தின் உழைப்பும் முக்தியின் சாந்தியும் ஒன்றாகின்றன. அப்போதே, நம்முடைய வேறுபட்ட காரியங்களனைத்தும் ஒரே பிரம்மத்தில் அடங்கும்;நம்முடைய துக்கத்தின்ஓலம்அனைத்தும், பரிபூரணமாம் ஆனந்தஸங்கீதத்தில் நிறைவடையலாகின்றது.

அளிப்பதற் கரியவற்றை அன்பினால் அளிக்க அளிக்க அதனால் வரும் ஆனந்தம் அளப்பரிய ஆழமுடையதாகின்றது. தன் பிள்ளையின்பால் வைத்த ஓர் அன்னையின் அன்பானது பல்வகையான இன்னல்களினாற்றான் பூரணமடைகின்றது. அன்புடைய கஷ்டங்களை மேற்கொண்டு தன் தாய்மையை நிரூபிப்பதாலவள் சந்தோஷமடைகின்றாள். பிரம்மத்தின்பால் உற்சாகமுடைய அன்பு நமக்கு ஏற்படும்பொழுதே, நமது இல்லறம் துன்பத்தின் மூலமாக நிறைவேறுகின்றது. அதுவே நமது அன்பை நாடோறும் பொலிவுசெய்து அலங்கரிக்கும். பிரம்மத்தின்பால் வை

த்த அன்பாகிய காணிக்கையை நமது துன்பமே ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுதியுடைய தாக்குகின்றது.

உயிரின் உயிரே, நயனத்தின் நயனமே, செவியின் செவியே, மனத்தின் மனமே, பரப்பிரம்மமே, என் செவி கண் சிந்தனைகளின் சகலகாரியங்களும் அல்லும் பகலும் உன்னை நோக்கியே செல்லுகின்றன. இதனை நான் அறிந்ததில்லையே யென்றும், முழு இச்சையுடன் நான் இக்காரியங்களைச் செய்யவில்லையே என்றும் துக்கப்படுகின்றேன். அனைத்தையும் நான், இருள் மூடிய மனத்தொரு மூடன்போல் வெளவி என்னுடையவைகள் என்று செல்ல நான் அவாவி இருந்தேன். வெளவும் இவ்வன்மை நிலைபேறுடையதன்று. என்னுடைய தென்று ஒன்றுமே இருக்க இயலாது. இதனை அறியாமல் நிகிலத்தினிடத்திலிருந்தும் பிரம மத்தினிடத்திலிருந்தும் அனைத்தையும் என்வசமே இழுத்துக்கொள்ளு மொரு பயனற்ற பிரயாசையினால் ஓயாத வேதனைக்கு ஆளாகியிருந்தேன். இன்று நான், ஒன்றையும் விழையவில்லை; ஏதொன்றையும் அடையவேண்டு மென்று நான் பிரார்த்தனை செய்ய மாட்டேன். இன்றைக்கோ நான் நல்கவே விரும்புகின்றேன். ஈயும் திறமையே எனக்கு வேண்டும். உன்னினுள் இன்று என்னை நான் பரிபூரணமாகத் துறந்து வெறுமையாக்கிக் கொள்வேன். வெறுமையாக்கிக் கொள்வதாலேயே பரிபூரணமடைவேன். ஓ, பிரம மமே, உன் பிரபஞ்சகாரியங்களின் மூலமாக நான் செய்யும் சேவையானது அந்தமற்ற என் அன்பை விழிக்கவைத்து நிலைபெற்றவனாக்கி, உனது அமிருத சாகரத்தின் மத்தியில் அளப்பரிய ஆழத்திலிருக்கும் அமைதியானது எனக்கு அழியாத சாந்தியை அளிக்கட்டும். நூற்றிதழ்த் தாமரைபோல் நாளுக்கு நாள் அகிலாண்டத்தின் மத்தியில் என்னைப் பொலிவுற அலரச் செய்து, உனக்கு யான் புரியும் பூசனையின் நிவேதனமாக என்னையே ஏற்றருள்வாய்.

முற்றிற்று.

---

# மதுரைக் கோவை

[236-வது பக்கத் தொடர்ச்சி]

## XVI இரவிற்குறி பிழைப்பு

அல்லகுறி தோழி தலைவிக் குரைத்தல்

ஓடைக் குவளையங் கண்ணியென் னேவென்
றுணர்கிலமண்
கூடைச் சடாதரர் கூடலங் கானலிற்
குன்றெழுந்த
வாடைக் கொசியு மிளமடற் றாழை
வனத்தொதுங்கும்
பேடைக் குருகொன்று துஞ்சில காணும்
பெருங்கங்குலே. 213.

அல்லகுறி தலைவன் சிறைப்புறமாகத் தலைவி கூறல்

வளைக்கும் பிறையர் மதுரேசர் தாளை
வணங்கலர்போ
லிளைக்குஞ் சிறிய மருங்குனல் லாய்சங்
கெறிதாளம்
விளைக்குங் கருங்கழிப் புன்னையங் கானலில்
வெள்ளிவந்து
முளைக்குந் தனையுமென் கண்ணும்புள் வாயு
முகிழ்த்திலவே. 214.

காவல் கடுகுதல்

வாயுறங் காகலை சூழ்மது ரேசரை
வாழ்த்தலர்போற்
பேயுறங் காத பெரு[ங்]கங்குல் வாயெனைப்
பெற்றெடுத்த
தாயுறங் காளிந்த வூருறங் காதலை
சாய்த்தொருகா
ளீயுறங் கா[ய்]துடி பேயென் கொலாமன்பர்
நெஞ்சுமின்றே. 215.

காட்சியாசையினிற் களம்புக்குக் கலங்கல்

போரம் பழிய விருகுழை யோடிப்
பொருதெனக்கு
வாரத் தருகண் மடமயி லேவணங்
காதவர்க்குக்
கோரந் தருமழு வார்சொக்க நாயகர்
கூடலிற்கல்
லாரந் தருவதுண் டோகழிக் கான
லலைக்கண்டலே. 216.

தலைவி புறம்போதல் கண்டு செவிலி யையுறுதல்

வாம்பாய் பரிநெடுந் தேர்ச்சொக்க நாதர்
மதுரைநகர்த்
தேம்பாய் கமலத் திருவனை யாள்துயில்
சோரவிந்தப்
பூம்பா யலுமென் புணர்முலைப் பாயலும்
போலமற்று
மாம்பா யலுமுள தோவென்ன மாய
மறிகிலமே. 217.

செவிலி தோழியை முனிதல்

ஊரார வாரந் தவிராத கங்குலி
லூடுருவத்
தோரார வார மணியுள தாம்புணர்ச்
செப்பைவென்ற
வாரார வார முலையுமைப் பாகர்
மதுரையிலிப்
போரார வாரம் பெருகவென் றேமகப்
பெற்றதுவே. 218.

அய்யச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப்
பொய்[ய]யன மாற்றி மெய்வழிக் கோடுதல்

தீயாடு செங்கைத் திருவால வாயர்
சிலம்பின்முன் றின்
போயாட வும்பக லஞ்சினிற் பாடன்னைப்
போக்கிநெடும்
பேயாடுங் கங்குற் கடைகடந் தாளென்று
பெற்றெடுத்த
தாயா னவளுரைத் தாலினி யேனொரு
சான்றிதற்கே. 219

செவிலியைத் தலைவன் சிறைப்புறமாகத் தோழி தலைவிக் குரைத்தல்

கடித்தா தவிழ்கொன்றை யார்கடம் பாடவிக்
கானலிலோர்
வடித்தாரை வேலண்ணல் வந்ததுண் டோவென்பள்
வாய்மடிப்பள்
அடித்தா மரையின் சுவடிதன் றேவென்ப
ளன்னைகள்ளம்
பிடித்தா ளெனவணங் கேசிவர் தாடன்
பிணைவிழியே. 220.

இரவு வார லேன்றல்

நிறங்கடை வேலண்ண லேகங்குல் வாய்வந்து
நீநின்றெங்கள்
புறங்கடை பற்றிப் பொலிவழிந் தானுமைம்
பூதமுத
லறங்கடை நின்ற பிரானுல வாயிலெம்
மன்னைநெஞ்சின்
மறங்கடை நின்றுகொண் டாலென்செய் வேனிவ்
வரவினுக்கே. 221.

பகல் வார லேன்றல்

எழுங்காள கூட விடங்கால நின்றெதி
ரேன்றமர்புக்
குழுங்கால கண்டவை வேலண்ண லேயுள
மொன்றுபட்டுத்
தொழுங்காத லர்க்குள வார்கடம் பாடவிச்
சொக்கர்வெற்பிற்
கொழுங்கா விரவி யெழுங்கால் வருவது
கொள்கையன்றே. 222.

இரவும் பகலும் வர்ரலேன்றல்

ஒருபோ தலரொரு போதையர் காவல்மற்
றன்வரவுக்
கிருபோதும் போதல்ல காணண்ண லேகல்
லிபங்குழையக்
குருபோத ராயிருப் பார்கூட லையகர்
கொண்டவிடந்
தருபோர யில்லினி யாளெங்ங னேவுயிர்
தாங்குவதே. 223.

தோழி தலைவனை நேர்ந்துகூறல்

எவர்க்கா யினுநல் லறிவொரு கோடி
யெடுத்துரைக்கு
மவர்க்கா ரறிவு சொலத்தகு வாரவர்
தாம்வணங்குங்
கவர்க்கால மூவிலை வேற்சொக்க நாதர்
கடம்பவனத்
துவர்க் காம வல்லி துயரறி யாரென்கொல்
சொல்லுவதே. 224.

இரவிற்குறி பிழைப்பு முற்றும்

---

# ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

## III. ஸ்ரீரங்கநாத ஸ்வாமி ஸ்தோத்திரங்கள்.

[253-வது பக்கத் தொடர்ச்சி]

6. இராகம்—ஸாரங்க] [தாளம்—திஸ்ர த்ரிபுடை சாபு.

பல்லவி

கருணஜூட வைய்ய—மாயய்ய—காவேடீ ரங்கய்ய..............................(க)

அநுபல்லவி

பரமபுருஷ விநுமா பாலதேலேநி தநமா—வரத நலுகுரிலோ—வரமொஸகி கரமிடி.........(க)

சரணங்கள்

சாரடேவி கநுலசே செலங்குவேளநா—சாருலதோனு மரிஸத் பக்துலதோ யாள்
வாருலதோ நீவு வரனைவேத்யமுல—நாரகிம்சு வேளல—ஹரி த்யாகராஜுநி கரமிடி...(க)

பொருள்.

மாயய்ய - என் ஐயனே! காவேடி ரங்கய்ய - உபய காவேரியின் மத்தியில் சயனித்துள்ள ஸ்ரீரங்க நாதனே! கருணஜூடவய்ய - கருணை புரிவாய் ஐயா!

பரமபுருஷ - பரமாத்மாவே! மா பலதேலேநி தநமா - எங்களுக்காகக் கிடைக்கக்கூடாத தனம் போன்றவனே! விநு - என் விண்ணபத்தைக் கேள்; வரத - வரங்களைக் கொடுப்பவனே! நலுகுரிலோ - (என்னைப் பழிக்கும்) நான்கு பேர்களிடையே, வரமு ஒஸகி - வரங்கொடுத்து, கரமுஇடி - கைகொடுத்து (கருணஜூடவய்ய - கருணை புரிவாய் ஐயா!)

ஹரி - ஹரியே! சாரடேவி கநுலசே - விசாலமான (கருணைக்) கண்களுடன், செலங்குவேளநு - பிரகாசிக் கின்ற சமயத்தில், ஆசாருலதோனு - ஆசார்யர்களுடனும், மரி ஸத்பக்துலதோ - மற்றும் சிஷ்டர்களான பக்தர்களோடும், ஆள்வாருலதோ-ஆழ்வார்களுடனும், நீவு - நீ, வரனைவேத்யமுலநு - சிறந்த பக்ஷ்ய போஜ்யங்களை, ஆரகிம்சுவேளல - அமுதுசெய்தருளும் வேளையில், த்யாக ராஜுநி - தியாகராஜனை; கரமுஇடி - கைகொடுத்து (கருண ஜூடவய்ய - கருணைபுரிவாய் ஐயனே!)

குறிப்பு

இந்தக் கீர்த்தனத்தை ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் "இராப்பத்து" என்ற உத்ஸவ சமயத்தில் ஸ்ரீரங்கநாதப் பெருமாள் ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தாரால் போற்றப்படும் ஆழ்வாராசாரியர்களின் மூர்த்தங்களோடு வீற்றிருக்கும் போது தரிசித்துப் பாடினர் என்று கூறப்படுகிறது.

ஸாரங்க ராகலக்ஷணம்

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறையின்படி 64-வதாக உள்ள வாசஸ்பதியில் ஜன்யமென்று சிலர் கூறுகின்றனர். பெரும்பான்மையோர் இது அம்முறையில் 65-வதாக உள்ள மேசகல்யாணியில் ஜன்யமென்று கூறுகின்றனர். ஸம்பூர்ண வக்ர ஷாடவராகமென்பது பொதுவான அபிப்பிராயம். எனினும் அவரோஹணத்தில் 'ஸ்நிதபம

ரிகமரிஸ' என்னும் பிரயோகம் காணப்படுகின்றது. இது பாஷாங்கராகம்; 'ரிகமரிஸ' என்று பிரயோகம் வரும்போதெல்லாம் சுத்த மத்யமமே பேசுகின்றது. இதில் காகலீ நிஷாதமே வழங்குகின்றபடியால் இதை மேசகல்யாணியில் ஜன்ய மென்றே சொல்லவேண்டும். இது மிகவும் ரக்தியான ராகம். இதில் உள்ள கீத கீர்த்தனுதிகளின் தார ஸ்தாயி ரிஷபத்திற்கு மேலும், மந்த்ரஸ்தாயி நிஷாதத்திற்குக் கீழும் பிரயோகங்கள் காணப்படவில்லை யென்பது முக்கியமாகக் கவனிக்கப்படத் தக்கதொரு விஷயம். மாலைக் காலத்திற் பாடத்தக்கது.

ஆரோஹணம்:—ஸரிகமபதநிஸ்

அவரோஹணம்:—ஸ்தாபமரிகமரிஸ;ஸ்நிதபமரிகமரிஸ.

## ஸ்வர ஸாஹித்யம்

### ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.

; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.

| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.

|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.

* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.

ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.

பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[குறிப்பு:—இக்கீர்த்தனம் மத்யம காலத்திற் பாடப்படவேண்டும். தாளத்தை அக்ஷரமெண்ணிப் போடாமல் தட்டுக்களை மாத்திரம் காட்டவேண்டும்.]

### பல்லவி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ; * ஸா; | ஸ்ா; ஸா; ‖ | ; பா; | பா; பாமா ‖ | பா ; ; | ; ; - மாபா ‖ | தா; நீ | ஸ்ா ; ; ; ‖ |
| ; * க; | ரு; ண; ‖ | ; ஜ௵;— | ட; வை . ‖ | ய ; ; | ; ; - மா . ‖ | யய்; . | ய ; ; ; ‖ |
| ; * ஸ்ா; | ஸ்நிதாபா; ‖ | பாமா; | ரீகாமாரீ ‖ | ஸா ; ; | ; ; - ; ; ‖ | ; ; ; | ; ; ; ; ‖ |
| ; * கா; | வே. . ட ; ‖ | ரங் . ; | கை . . . ‖ | ய ; ; | ; ; - ; ; ‖ | ; ; ; | ; ; ; ; ‖ |

### அநுபல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ; * ஸ்ாஸ்ா | ஸ்நிதாபா; ‖ | பாபா; | மாபாதாநீ ‖ | ஸ்ா - ஸ்ா; | ஸ்ா;ஸ்ா, ‖ | ஸ்ா;ஸ்ா | தாநீஸ்ா; ‖ |
| ; * ப ர | ம . . பு; ‖ | ருஷ; | வி . று . ‖ | மா - பா; | ல; தே; ‖ | லே; நி | த நமா; ‖ |
| ; * நீஸ்ா | ரீ; ஸ்ா; ‖ | தாபா; | தாநீஸ்ா; ‖ | ; - ஸ்ாஸ்ா | ஸ்நிதாபா; ‖ | ; மாரீ | காமாரீஸா ‖ |
| ; * வர | த; ந ; ‖ | லுகு; | ரி . லோ; ‖ | ; - வ ர | மொ . . ஸ ; ‖ | ; கிக | ர . மி . ‖ |

ஸா *
டி * (கருண ஜ௵டவய்ய)

### சரணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| , * பா; | பா; பா; ‖ | பாமா; | ரீகாமாரீ ‖ | ஸா - ஸாரீ | கா; மா; ‖ | பா ; ; | பா; பா: ‖ |
| ; * சா; | ர; டே; ‖ | விக; | நு . ல . ‖ | சே - செ . | லங்; கு; ‖ | வே ; ; | ள; நா; ‖ |
| ; * மாபா | தாநீஸ்ா; ‖ | தா பா; | பாமாரீ; ‖ | ; - ரீகா | மாரீ; ஸா ‖ | ரீகா, | மா ;பா: ‖ |
| ; * சா . | ரு . ல ; ‖ | தோ . ; | நு ம ரி; ‖ | ; - ஸத் | பக் . ; து ‖ | ல . ; | தோ;யாள்; ‖ |

'வாருலதோ நீவுவர நைவேத்யமுல—நாரகிம்சுவேளல ஹரித்யாகராஜுநி கரமிடி"—
இதை அநுபல்லவிபோலப் பாடவும்.


## திருக்குறள் மூலமும் சொற்குறிப் பகராதியும்.

வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்குமாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமாயிருக்கும். ஒப்புக்குறள்களையும் தொகுத்துப் பதிப்பாசிரியர் அளித்திருப்பது மிகவும் பயனுடையதாம். பயிலப்பயில இப்பதிப்பின் பெருமையும் அருமையுந் தெரியவரும். விலை—அணு 12. தபால் செலவு வேறு.

கலாநிலயம், புரசை. சென்னை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மன்னடைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)

I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

நஞ்சன்கூடு பல்பொடி

சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மெடிகேட்டட்-டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச. சிறந்த டானிக். சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்ததிறமணைக்கு எண்ணெய். காஸ்ட்ராலகஸ்

ஜவரேக்

[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

ஹங்கேரியில் 261 குள்ளர்கள் சங்கம் கூடி, புகை வண்டிகளிலும், டிராம், பஸ் வண்டி, கூத்து மேடை முதலிய இடங்களுக்கும் அரை சார்ஜ தான் வாங்க வேண்டுமென்று மனுபோடத் தீர்மானித்திருக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய உயரம் முழுக் கட்டணம் கட்டக்கூடியதாகவில்லை யென்பதாம்.

*  *  *

மணவிலக்குக்கு விநோத காரணம்:—சிக்காகோ நகரின்கண் வசித்திருந்த லோனு ஜோன்ஸ் என்ற மாது பிலிங் கோன்ஸ்றன் என்றவரை 1928ல் மணந்தாள். இப்பொழுது மணவிலக்குக் கோரி நிற்கிறாள். அதற்குக் காரணம் என்னவெனில் தான் கொழுத்துப்போனமையே யாம். கணவன் கொடுமைப் படுத்தியபடியால் தனது உடல் பெருத்துக் கனமடைந்ததாம். 1928-ல் அவளது நிறை 128 இருத்தல். அதன் பிறகு அப்பெண்ணின் நிறை கணக்கு விபரம் வருமாறு:-"கணவன் அன்பற்றுக் கோபமாய்ப் பார்த்தார், நிறை 135 இருத்தல். பட்சமற்ற வார்த்தைகள் 145 இருத்தல். வீட்டைவிட்டு வெளியேற்றல் 155 இருத்தல். வீட்டை விட்டு வெளியே தள்ளித் 'தடிச்சி' என்று வைதபடியால் நிறை 160 இருத்தல். தராசை உடைத்து வெளியே தள்ளல் 165 இருத்தல்". இவை குரூரமான செயல்களானபடியால் தனக்கு விவாக விடுதலை வேண்டுமென்று வழக்காடுகிறாள் அம்மாது.

*  *  *

பெண் அரசு:—நியூ கினியாவில், ஒரு பகுதியில் உள்ள ஒரு சிறு நாட்டைப் பெண்களே ஆட்சி செய்கிறார்களாம். ஆண்கள் அடிமைகள் போல வேலை செய்கிறார்களாம். மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ராணியே ஆட்சி புரிகிறாளாம்.

நாய் எமன்:—மத்திய இந்தியாவில் ஒரு சமஸ்தானத்தின் அதிபதி வளர்த்து வந்த எண்பது, (பிரஞ்சு அல் சேட்டியன்) நாய்கள் ஒரு நாள் இரவு அவர் ஒன்றுவிட்ட சகோதரர் அரண்மனையில் உலாவப் போனபொழுது அவர்மீது பாய்ந்து அவரைக் கொன்று தின்றுவிட்டனவாம். எலும்புகள்தான் பாக்கியாய்க் கிடந்தனவாம். வயிரவருக்குப் பலியானவரின் குடும்பத்திற்கு அந்த அதிபதி ஏராளமான பணம் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டாராம்.

*  *  *

பேர்போன ஜென்னி டாலி யென்ற நடிகமாது 56,000 பொன் மதிப்புள்ள வயிர மோதிரத்துக்கு வரி செலுத்தாமல் கொண்டுபோனதற்காகப் பாரிசில் ஒன்றரை லட்சம் பொன் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார். மோதிரத்திற்கு வரி 6,600 பொன்னும்.


**NATIONAL INSURANCE COMPANY, LIMITED.**
**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**

**1933 Results.**

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

**Specialities.**

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**Consult**
**NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,**
Head Office:—
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**
for Fire, Motor & Accident policies.

**A sound Company.**
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*



உயர்ந்த ஜாதி
**பழமரக் கன்றுகள்**
முறைப்படி வளர்க்கப்படுவன
**பழமரங்கள் வைத்து வளர்ப்பதால் இலாபம்.**

அவை உயர்ந்த ஜாதியாயிருக்கவேண்டும். ஜாதியின் சிறப்பு அவைகளை வளர்க்கும் முறைக்குத் தக்கபடி அமையும். உங்களுக்கு வேண்டிய பழச் செடிகளை தக்க இடத்தில் வாங்கத் தயங்காதீர்கள்.

விலையும் நயம்!

ஜாதியில் உயர்ந்தது! ஒருபோதும் கெடாதது!!

**தென்னிந்தியா முழுவதும் பேரெடுத்தது தேசாயின் பழச்செடி தினுசுகளே.**

உங்கள் தோட்டம் தோப்புக்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு முன்பு தேசாயைக் கேட்டுத் தெரிந்து வாங்குவதே நன்மையும் இலாபமும் ஆகும் என்பதைத் தீர்மானமாய் வைத்துக்கொள்ளுங்கள்.

நேரிலாயினும் கடித மூலமாயினும் எது கேட்டாலும் தெரிவிக்கத் தயாராயிருக்கிறார். தேவகோட்டை ராம்நகர் எக்ஸ்டென்ஷனில் பழத் தோட்டங்களும் அலங்கார நந்தவனங்களும் அமைத்துத்தரவும் மேற்பார்வை செய்யவும் ஏற்றுக்கொள்வார்.

D. T. தேசாய்—பழமரம் பூஞ்செடி எக்ஸ்பர்ட்.
தேசாய் அண்டு கோ.,
17, க்ராஸ் ரோட் :: மல்லேச்வரம், பங்களூர்.

**DESAI & Co.,** 17, Cross Road, Malleswaram, BANGALORE



**இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்**
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53 வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! இனும்!!

"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனாமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26 பிராட்வே, மதராஸ்.


Printed at he B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)